நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 08 சனிக்கிழமை (20.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 63

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## தமிழ்க் கூட்டமைப்புடன் கஜேந்திரகுமார் முறுகல்

### வெளிநடப்பும் செய்தார்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான தலைவர்களுக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் இடையில் நேற்று முறுகல் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால், பிரேரிக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்.

பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இரு நாடுகள் என்ற கொள்கையை வலியுறுத்த வேண்டும் என அவர் விடுத்த கோரிக்கை சம்பந்தன் தலைமை (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி இறுதி யுத்தத்தின் போது இறந்தவர் தொகை தெரியாது

### இப்படிச் சொல்லுகிறது ஐ.நா.

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரச படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட பொதுமக்கள் தொடர்பில் உத்தியோகபூர்வ எண்ணிக்கை எதனையும் ஐ.நா. கொண்டிருக்கவில்லை எனவும் ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகள் ஒருங்கிணைப்பாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்துக்கும் 40 ஆயிரத்துக்கும் இடைப்பட்டது என்று இலங்கையில் ஐ.நாவின் சார்பில் பேசவல்ல முன்னாள் அதிகாரியான கோர்டன் வெய்ஸ் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கவிழ்ந்தது கொள்கை; கப்பல் ஏறியது பதவி ஆசை

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலர் ஆளும் கட்சியில் போட்டி

### இன்னும் அதிரடிகள் காத்திருப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சிலர் ஆளும் கட்சியில் போட்டியிடவுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்கள்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரண்டு சிங்கள வேட்பாளர்களும் ,ஒரு முஸ்லிம் வேட்பாளரும் போட்டியிடவிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவரும், வன்னியில் இரண்டு சிங்கள வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை பொதுத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் கிழக்கு மாகாணத்துக்கான வேட்பாளர் பெயர் பட்டியல் தயாரிப்புப் பணிகள் இன்று நிறைவடையும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கட்சியிலுள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## இரண்டு சுயேட்சைக் குழு கட்டுப்பணம் செலுத்தியது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக நேற்று வரை இரண்டு சுயேட்சைக் குழுக்கள் யாழ் மாவட்டச் செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

சுயேட்சையாகப் போட்டியிடுவதற்கு நேற்று சுந்தரலிங்கம் சத்தியசீலன்(கிளிநொச்சி) என்பவரை முதன்மை வேட்பாளராகக் கொண்டு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் சண்முகநாதன் மகேந்திரன் (சாவகச்சேரி) என்பவரை முதன்மை வேட்பாளராகக் கொண்டு சுயேட்சையாகப் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. (ந-7)

## ஜெனரல் பொன்சேகாவின் கைது பல கேள்விகளை எழுப்பியுள்ளது

### ஐரோப்பிய ஒன்றியம் கருத்து

(கொழும்பு)

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை நிறுத்தும் முடிவுகள், ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டவை.

எனினும் பொதுத்தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சிகளின் பிரதம வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டது பல கேள்விகளை எழுப்பியுள்ளது என ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினரும் தென்னாசியப் பிராந்தியத்துக்கான குழுவின் தலைவருமான ஜீன் லம்பேர்ட் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு சிறிலங்கா அரசு விருப்பம் தெரிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

இரு தரப்பும் தமது கருத்துக்களை முன் வைப்பதன் மூலம் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பலப்படுத்தி தற்போது ஏற்பட்டுள்ள இந்தக் குறுகிய கால முறுகல் நிலையைத் தளர்த்தலாம்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையின் தற்காலிக நீக்கம் (16 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியத் தூதுவரை ரணில் சந்திப்பு

## பொன்சேகாவை விடுவிக்க உதவுமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு ரணிலின் உத்தியோக பூர்வ இல்லமான கேம்பிறிச் ரெரஸில் இடம் பெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது எதிர்வரும் பொதுத் தேர்தல் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தடுத்து வைப்புப் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதன்போது சரத் பொன்சேகாவின் விடுதலைக்கு இந்திய அரசாங்கம் வலியுறுத்தலை மேற்கொள்ள வேண்டும் என ரணில் கேட்டுக் கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-5)

## பொன்சேகாவின் மருமகனை தேடுகிறது குற்றப் புலனாய்வு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுக திலகரட்ணவினைக் கைது செய்வதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தனது அதிகாரிகளை ஈடுபடுத்தியுள்ளது.

திலகரட்ண வெளிநாடு சென்றுள்ளார் என்பது இதுவரை உறுதியாகக் கண்டறியப்படவில்லை என பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அவரைத் தேடி கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள கடற்படைத் தலைமையகத்தில் வைத்தே இந்த விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பிரசாந்த ஜெயக்கொடி மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# பொதுத் தேர்தலில் விளையாட்டு வீரர்கள்

(கொழும்பு)

இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட, சுழல்பந்து வீச்சு வீரர்கள் மற்றும் ஓட்ட வீராங்கனை ஒருவர் என விளையாட்டுத்துறையைச் சார்ந்த மூவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தனது நிலைப்பாடு குறித்து இன்னும் இரண்டு தினங்களில் அறிவிப்பதாக தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அர்ஜுன ரணதுங்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கினார். எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கிய போதும் தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை என்பதையும் அவர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்காத ஒருவரை சுதந்திரக் கட்சியில் போட்டியிட வைப்பது குறித்து சிரேஷ்ட உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்க்கமாக ஆராய்ந்து வருவதாக ரணதுங்க தெரிவித்தார். 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி வாகை சூடியதன் பின்னர் அணித் தலைவர் வரிசையில் வெற்றித் தலைவர் என ரணதுங்க புகழப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வியாபார முகாமைத்துவமாணி வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வியாபார முகாமைத்துவமாணி (இணையவழி) கற்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை மண்டபத்தில் இடம்பெறும்.

இணையவழி மாணவர்கள் இதில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறும் இதில் முதலாம் அரையாண்டுக்கான பாடங்கள் பற்றிய விளக்கம் கொடுக்கப்படும் எனவும் வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா கேட்டுள்ளார். (ந)

## தெஹிவளை வீட்டில் தமிழ்ப் பெண் மர்ம மரணம்

(கொழும்பு)

தெஹிவளை, களுபோவில ஜயசிறி மாவத்தையிலுள்ள வீடொன்றில் மர்மமான முறையில் இறந்து கிடந்த தமிழ்ப் பெண் ஒருவரின் சடலத்தை தெஹிவளைக் பொலிஸார் நேற்று முன்தினம் காலை மீட்டுள்ளனர்.

பெண்ணின் கழுத்துப் பகுதியில் பாரிய வெட்டுக் காயங்கள் இருந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர். குறித்த பெண்ணின் உடல் மீட்கப்பட்டபோது அவர் தனது கையில் கூரிய ஆயுதமொன்றை வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 58 வயதான சின்னத்தம்பி கனகதேவி என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தப் பெண் அவரது மூளைவளர்ச்சி குன்றிய மகளுடன் வாடகை வீட்டில் வசித்து வந்ததாகவும் தெரியவந்துள்ளது. இந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டுள்ளாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது குறித்து விசாரணைகளை நடத்திவருவதாகவும் தெஹிவளை பொலிஸார் கூறியுள்ளனர். (ந-5)

## பன்றி குறுக்கிட்டதால் மாணவர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைதடியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் மாணவர்கள் துவிச்சக்கரவண்டியில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது வீதிக்கு குறுக்கே பன்றி பாய்ந்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை கைதடியில் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது பகீரதன் (வயது-14), கௌதமன் (வயது-16)ஆகிய மாணவர்களே படுகாயமடைந்தவர்களாவர். (ந-30)

## காசநோய் சிகிச்சையை கைவிட்டவர்களின் கவனத்திற்கு

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தபோது காசநோய்க்கான சிகிச்சை பெற்று வந்த நிலையில் முகாமிலிருந்து வெளியேறிய பின்னர் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றுக் கொள்ளாத காசநோயாளர்கள் உரிய சிகிச்சையினை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்தியகலாநிதி சி.யமுனாநந்தா கேட்டுள்ளார்.

காசநோய்க்கான சிகிச்சையினை மேற்கொண்டவர்கள் அச்சிகிச்சையினை இடையில் கைவிடும் போது மருந்திற்கு எதிர்ப்புடைய காசநோய்க் கிருமிகள் உருவாகவும், பரம்பலடையவும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் சிகிச்சையினை இடையில் கைவிட்ட நோயாளிகள் அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையிலோ அல்லது மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்திலோ உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ந-14)

## பேசும் படம்



இப்போது தெரிகிறதா? எமது நிலைமையை...

# சுற்றுலாப் பயணிகள் பஸ் வேலணையில் புதைந்தது

(வேலணை)

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட சிங்கள மக்கள் பயணித்த பஸ் வீதியை விட்டு விலகி புதையுண்டது.

இச்சம்பவம் நேற்று காலை வேலணை அராலிச் சந்தியில் இடம்பெற்றது.

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாப் பயணம் வரும் சிங்கள மக்கள் நயினாதீவு நாக விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் நேற்றுக்காலை நயினாதீவுக்குச் சென்ற தென்பகுதி மக்கள் பயணித்த பஸ், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்ஸிற்கு வழி விட்டுக் கொடுப்பதற்கு முயற்சித்த போது மணற்பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு புதையுண்டது.

இவ் பஸ்ஸில் 60இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்தனர். எனினும் பயணிகள் எவருக்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை. (ந-5)


வாடிக்கையாளர்களே!

காலை 6.00 மணி தொடக்கம் காலை 9.00 மணி வரை
மாலை 7.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை
SLT Broad Band 40/= 1Hour
Dialog Broad Band 30/= 1Hour
E-mail மூலம் புகைப்படங்கள் அனுப்ப 10/=
நெற் போன் 1 நிமிடம் 1.50
(30 நிமிடத்திற்கு மேல் உரையாடுபவர்களுக்கு)
சேவை 6.00 am to 10.00 pm
கணபதி நெற்......
320, பலாலிவீதி.(பரமேஸ்வராச் சந்தியில் இருந்து 100யார் தூரத்தில் யாழ்நகர் நோக்கி)


# அரசின் அச்சுறுத்தலாலேயே பௌத்த மாநாடு நின்றுபோனது

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அச்சுறுத்தல் காரணமாகவே நான்கு பௌத்த பீடங்களின் மகா நாயக்கர்கள் தமது சம்மேளன மாநாட்டை நடத்தவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தினால் தென்மாகாணத்தில் உள்ள மல்வத்தை பீடத்தைச் சேர்ந்த சுமார் 500 மதகுருமார்கள் அச்சுறுத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்ற யோசனையை முன்மொழிவதற்கான பௌத்த பீடங்களின் மகா நாயக்கர்கள் கண்டியில் மாநாடு ஒன்றை நடத்தவிருந்தனர்.

எனினும் பின்னர் அதனை காலவரையறையின்றி ஒத்திவைப்பதாக அவர்கள் அறிவித்தனர். பௌத்த பிக்குகளின் பாதுகாப்புக் கருதியே தாம் இதனை ஒத்திவைப்பதாக அவர்கள் தெரிவித்தனர். இந் நிலையிலேயே ரணில் விக்கிரம சிங்கவின் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது. (ந-5)

# ஐ.தே.கட்சியுடன் ஜே.வி.பி ஒருபோதும் கூட்டுச் சேரவில்லை

## சோமவன்ஸ அமரசிங்க

நாங்கள் ஐ.தே.க. உடன் ஒருநாளும் கூட்டு சேரவில்லை.நாம் ஜெனரல் பொன்சேகாவை ஆதரித்தோம். ஐ.தே.கவும் ஜெனரல் பொன்சேகாவை ஆதரித்தது. அதுபோல் ஏனைய கட்சிகளும் பொன்சேகாவை ஆதரித்தன என்று சோமவன்ச தெரிவித்தார். எம்மிடையே இருந்த ஒரே உடன்பாடு ஜெனரல் சரத் பொன்சேகாவை வெல்ல வைக்க வேண்டும். நல்லாட்சி, நல்ல ஜனநாயகம் என்பவற்றை கொண்டு வர வேண்டும் என்பது தான் என்று அவர் கூறினார். ஜனாதிபதி தேர்தலின் பின் கட்சி பலவீனமடைந்திருக்கின்றது என்னும் கருத்தை அமரசிங்க முற்றாக மறுத்தார்.

ஜெனரல் பொன்சேகாவை ஆதரித்ததற்காக எமது தொண்டர்கள் எவரும் கட்சியை விட்டு விலகவில்லை. தற்போது நாடாளுமன்ற தேர்தலுக்காக ஜே.வி.பியினர் சரத் பொன்சேகாவை தலைவராகக் கொண்டு ஒரு புதிய ஜனநாயக முன்னணி என்னும் ஒரு அமைப்பை தோற்றுவித்துள்ளனர். ஜெனரல் பொன்சேகா தனது உடன்பாட்டை எமக்குதந்துள்ளார். நான் தடுமாறவில்லை. அவர் தடுமாறவில்லை, ஜே.வி.பி தடுமாறவில்லை, முன்னணியில் சேர உடன்பட்டிருக்கும் ஏனைய கட்சிகள் த்டுமாறவில்லை என்று அமரசிங்க கூறினார். (ந-5)


கண்ணீர் அஞ்சலி

டென்மார்க்கில் காலமான திருமதி

நாகரத்தினம் விசுவலிங்கம் (வேபி அக்கா)



(சங்கானை)

என்ற தாய்க்கு எமது கண்ணீர் அஞ்சலிகள் உரித்தாகட்டும்

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

'நாகம்ஸ் குடும்பம்' வட்டுக்கோட்டை.

நன்றி மறவாத மேரிதாஸன் மாஸ்ரர்

(அ-4474)



கோகுல் ரவல்ஸ் Hokul Travels







திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-

021 222 8984, 077 3747825, 077 6152992

(C-4449)



அம்பிகை திருமண பொருத்துநர்

உள்நாடு, வெளிநாடு உட்பட டாக்டர், என்ஜினியர், ஆசிரியர், சிறுதொழில் பார்ப்போர், வியாபாரிகள் உட்பட பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு.

அத்துடன் ஆண், பெண் இருவர் சாதகமும் பொருத்தம் பார்த்தும் எழுதிக் கொடுக்கப்படும். சாதக கொப்பி எழுதிக் கொடுக்கப்படும்.

T.P:- 021 7902151
077 4103597

அம்பிகை திருமண பொருத்துநர்,
கீரிமலை வீதி,வடலியடைப்பு,

உரிமையாளர்:-உதயகுமார் லலிதாம்பிகை. பண்டத்தரிப்பு. (C-4465)


## தொடர்பு கொள்க



சின்னமடு-புளியங்கூடலைச் சேர்ந்த மாணிக்கம் புஸ்பராசா, விநோததாஸ், ஜெசிந்தா, தேவகிபா என்பவர்களை அவரது உறவினரான நாதன் என்பவர் தேடுகின்றார். கடைசியாக இவர்கள் புதுமாத்தளன் பகுதியில் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி காணப்பட்டார்கள் என தகவல் தெரிவிக்கின்றன.

இவர்களைப் பற்றி விபரங்கள் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல: 077 3442566

(இ)

## இன்று ஒரு தகவல்

# அந்த ஐந்து பேர்

ஒரு ஆளை குறிப்பிட்டு "அந்த ஆள் மாதிரி இந்த உலகத்தில் வேறுயாரையும் பார்க்க முடியாது. அவர் கோடியில் ஒருத்தர்" என்று சொல்வதுண்டு அப்படியானால் என்ன அர்த்தம்?

அந்த ஆள் அருமையிலும் அருமையானவர் என்று அர்த்தம்.

இந்த உலகத்தில் அருமையிலும் அருமையானவர்கள் ஐந்து பேர் உண்டு என்று வாரியார் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

யார் அந்த ஐந்து பேர்?

- தன்னுடைய பொருளின் கெடுதியைக் கூறும் வியாபாரி
- புகழை விரும்பாத கொடையாளி
- மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன்வாங்கும் வணிகர்.
- எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர்
- தண்ட னையை நியாயம் என்று ஒப்புக் கொள்ளும் குற்றவாளி.

இந்த ஐந்து பேரும் அருமையிலும் அருமையானவர்கள் பின்னே இல்லையா?

தன்னுடைய பொருளின் கெடுதியைக் கூறும் வியாபாரி யாராவது உண்டா?

உளுத்தம் பருப்பு ஒரு கிலோ வேண்டும் என்று கேட்கிறீர்கள். "வேணாம் சேர்... எங்கட கடையில் இருக்கிற உளுத்தம் பருப்பு அவ்வளவு நல்லதில்லை. எதிரில் ஒரு கடை இருக்கு பாருங்க... அந்தக் கடையில் நல்லது இருக்கு... போய் வாங்குங்க." என்று யாராவது சொல்லுவார்களா? சொன்னால் அந்த ஆளுக்குப் புத்தி சரி இல்லையென்று நினைப்போம். அதே மாதிரித்தான்.

புகழை விரும்பாத கொடையாளி. இந்தக் காலத்தில் கொடையாளி ஆடுவதே புகழுக்காகத் தானே!

இடதுகை கொடுக்கிறது வலது கைக்குத் தெரியக் கூடாது என்பார்கள். ஆனால் இன்றைக்கு எதைக் கொடுத்தாலும் இரண்டு கையாலும் சேர்த்துக் கொடுத்து போட்டோ பிடித்துக் கொள்கிறோம். இடதுகை வாங்குவது வலது கைக்குத் தெரியக் கூடாதென்று வேண்டுமானால் சொல்லலாம். அது இந்தக் காலத்துக்குப் பொருத்தமாக இருக்கும்.

மூன்றாவது மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்குபவர்.

கூட்டிச் சொல்லி வாங்கினால் அவருடைய நிலைமை என்னாகிறது?

அடுத்ததாக எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர் இன்றைக்கு உலகத்தில் இலஞ்சம் வாங்காமல் கூட எப்படியாவது இருந்து விடலாம். ஆனால் இலஞ்சம் கொடுக்காமல் யாரும் காலம் தள்ள முடியாது போலிருக்கே!

ஐந்தாவது நபர் தண்டனையை நியாயம் என்று ஒப்புக் கொள்ளும் குற்றவாளி.

எனக்கு நீதிமன்றத்தில் பத்து வருட கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்பு சொன்னார்கள். அது மிகவும் நியாயமான தண்டனைதான். அந்த தண்டனையைக் கொடுத்த நீதிபதி எனக்குத் தெய்வம் மாதிரி... என்றா சொல்லிக் கொண்டிருப்பான்.

இப்படியெல்லாம் ஆட்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டம். அப்படியாராவது எங்கேயாவது கண்ணில் பட்டால் அவர்கள் அருமையிலும் அருமையானவர்கள் தான். அதில் சந்தேகமேயில்லை.

ஒருத்தர் மிகவும் கௌரவமான உத்தியோகத்தில் இருந்து கொண்டு இலஞ்சம் வாங்கினார்.

"ஏன் சேர் இது தப்பில்லையா?" என்று கேட்டேன்.

"இதில் தப்பிருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏனென்றால் இந்த கௌரவமான உத்தியோகத்தையே நான் இலஞ்சம் கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறேன்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பயிற்றப்படாத ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் திட்டம் ஆரம்பம்

பயிற்றப்படாத சகல ஆசிரியர்களுக்கும் விஷேட பயிற்சி அளித்து அவர்களின் சேவையை மேம்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் படி நாடளாவிய ரீதியில் 42 மத்திய நிலையங்களில் இந்த ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரியல்லாத பயிற்றப்படாத சகல ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கும் இந்த விஷேட திட்டம் இன்று நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவு தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்திப் பிரிவும் இணைந்து இத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

வார இறுதி நாட்களில் இப்பயிற்சியை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தமிழ் மொழிமூலம் 18 மத்திய நிலையங்களும் சிங்கள மொழி மூலம் 17 மத்திய நிலையங்களும் ஆங்கில மொழி மூலம் 7 மத்திய நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

மேலும் இவற்றில் கடமைபுரிய பகுதி நேர அடிப்படையில் வருகை தரும் விரிவுரையாளர்களாக சுமார் 200 பேர் வரை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்படவுள்ளனர்.

இரு வருடங்களைக் கொண்ட இப்பாட நெறி அளவீடும் மதிப்பீடும் கல்வி, உளவியல், வகுப்பறை முகாமைத்துவம் முதலான பாடப் பரப்புகளைக் கொண்டிருக்கும். (6)

## துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவில்லை

வன்னிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் கல்வி கற்கின்ற மாணவர்களிற்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்போவதாக கூறி பல பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இதுவரை துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்த மாணவர்கள் பல மைல் தூரம் நடந்து சென்றே கல்வி கற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-43)

# உலக சாரணர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இலங்கைச் சாரணர் சங்கம் நடத்தும் உலக சாரணர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் இலங்கை சாரணர் சங்கத்தின் வடமாகாண ஆணையாளர் ரி.என். போஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை சாரணர் சங்கத்தின் உதவிப் பிரதம ஆணையாளர் எம். எவ்.எஸ். முகீட் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா, கௌரவவிருந்தினராக மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## பொதுக்கூட்டம்

யாழ்.சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் கழகத் தலைவர் பி.சங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது. (6-4)

# வடமாகாண மாவட்டங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மஞ்சி பிஸ்கட் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கே. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் சி. ஓங்காரமூர்த்தி கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி. ஜே.எப். ரூபசிங்கம், ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரெட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-4)

## பற்சிகிச்சை நிலையம் மீண்டும் ஆரம்பம்

பலவருடங்களாக இயங்காதிருந்த நயினாதீவு பிரதேச வைத்தியசாலையின் பற்சிகிச்சை நிலையம் அதி நவீன உபகரண வசதிகளுடன் அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சிகிச்சை நிலையத்தில் பிரதி வியாழக்கிழமை தோறும் பல் வைத்திய நிபுணர் டாக்டர் கே. அகிலனால் பற்சிகிச்சைகள் நடத்தப்படவுள்ளது. (6-4)

## இராசி பலன்

*(20.02.2010 மாசி 8, சனிக்கிழமை)*
*சஷ்டி பிற்பகல் 3.00 மணிவரை*
*பரணி பின்னிரவு 3.47 மணிவரை*
*இராகுகாலம் 9.32-11.02 மணிவரை*
*சுபநேரம் 3.32- 5.02 மணிவரை*
*இராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்த தினம், சஷ்டி விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | தன்னம்பிக்கை, செய்தொழில் விருத்தி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | கோபப்படுதல், காரிய அலைச்சல், பிதாசிந்தை, பணவிரயம். |
| மிதுனம் | கலந்துரையாடல், குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| கடகம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, நண்பர்கள் உதவி, போசன சுகம். |
| சிங்கம் | பெரியோர் உதவி, உடல் உழைப்பு, பிரயாண நன்மை, அஜீரணக் கோளாறு. |
| கன்னி | போசன சுகம், வீண்பகை, காரிய தாமதம், திடீர் நன்மை. |
| துலாம் | அபூர்வ சந்திப்பு, இனிய தகவல், வாகன சுகம், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | பண வருவாய், சத்துருஜெயம், திடீர் பயணம், உற்சாகம். |
| தனுசு | கூட்டு முயற்சி, பண வருவாய், விவாதம், ரோகநிலை. |
| மகரம் | பயந்த சுபாவம், புதிய செய்தி தனவிரயம், அற்பர் உறவு. |
| கும்பம் | இனிய தகவல், காரிய நன்மை, பணவருவாய், சிந்தனை மிகுதி. |
| மீனம் | குடும்பக் கவலை, வேலைச் சுமை, பிரயாணம், முயற்சி தாமதம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 120 |
| தக்காளி | 90 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 50 | 60 | 50 |
| கரட் | 70 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 70 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 110 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 |
| கரணைக்கிழங்கு | 40 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 130 | 100 |
| லீக்ஸ் | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 360 |
| போஞ்சி | 70 | 90 | 80 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 30 |

# மேற்குலகின் தாளத்திற்கேற்ப ஆடமுடியாது - பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

மேற்குலகத்தின் தாளத்திற்கு ஏற்ப நாம் நடனமாட முடியாது. நாம் எமது மக்களின் விருப்பத்திற்கு அமைவாகவே செயற்படுவோம் என பிரதமர்ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் கொறணைப் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒருநாட்டின் விடயங்களில் தலையிடும் உரிமைகள் வெளிநாடுகளுக்கு கிடையாது. மேற்குலகத்தின் தாளத்திற்கு ஏற்ப ஆட முடியாது. நாம் மக்களின் விருப்பத்திற்கு அமைவாகவே நாட்டை ஆட்சி செய்வோம்.

நாட்டுக்கு துரோகம் செய்தவர்களை விடுதலை செய்யுமாறு மக்களில் சிலர் கேட்கின்றனர். ஆனால் யார் குற்றம் செய்தாலும் அவர்கள் சட்டத்திற்கு அமைவாக தண்டிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# முந்தலில் 14 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் மீட்பு

ஒவ்வொரு கிலோவாக பொதி செய்யப்பட்டு பயணப் பொதி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த 28 கிலோ ஹெரோயின் போதைப் பொருளை கற்பிட்டி பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இதன் பெறுமதி 14 கோடி ரூபா என மதிக்கப்பட்டுள்ளது. ஹெரோயின் போதைப் பொருளை அருகில் வைத்திருந்தார் எனக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

முஸ்லிம் இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர். முந்தல் அக்கரவெளி பகுதி வீடொன்றில் இருந்தே 28 கிலோ ஹெரோயின் போதைப் பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கற்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரிலேயே விசேட பொலிஸ் குழுக்கள் இச் சுற்றிவளைப்பை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# பட்டதாரிகள் தாய்நாட்டில் தங்கியிருந்து சேவையாற்ற வேண்டும்

## கலாநிதி என்.எல்.ஏ.கருணாரட்ண

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறும் சகல பட்டதாரிகளும் இலங்கையில் தங்கியிருந்து தாய் நாட்டிற்கு சேவையாற்ற வேண்டும் என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி என்.எல்.ஏ. கருணாரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் புதியதொரு சகாப்தம் உருவாகியுள்ளதனால் கல்விமான்கள் வெளிநாடு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் 51 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சியில் பங்குபற்றி உரை நிகழ்த்திய உபவேந்தர் நாட்டில் சமாதானமும், ஒற்றுமையும் உருவாக்கப்பட்டிருப்பதால் பட்டதாரி மாணவர்கள் நாட்டில் தங்கியிருந்து நாட்டிற்கு சேவையாற்ற வேண்டுமென கூறியுள்ளார்.

பேராசிரியர் சுனில் ஆரியரட்ணவால் தயாரிக்கப்பட்ட ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வரலாற்று நூலும் அங்கு வெளியிடப்பட்டுள்ளது. (6-ப)

# கண்ணிவெடிகள் அகற்றும் பணி

(பொன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள ஹாட்லிக் கல்லூரியை அண்டிய பகுதியிலும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையை அண்டிய பகுதியிலும் உள்ள காவல் அரண்களிற்கு அருகில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடிகளை அகற்றும் நடவடிக்கையில் டெனிஸ்கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (6-43)

# ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 175 ஆவது ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் ஒரு மணிவரை தாவடி சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதித் தலைவர் த.முருகானந்தா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க.சிவனேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகத் தலைவர் ச.முகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-4)

# உள்ளூராட்சித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம்

(பொன்னாலை)

உள்ளூராட்சித் திணைக்களங்களில் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்கள் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றப் பட்டியல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முகாமைத்துவ உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் , நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் , உள்ளூராட்சி உதவியாளர்கள், சனசமூக நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கே இவ்வாறு இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த இடமாற்றம் அடுத்த மாதம் ஆரம்பத்திலிருந்து அமுலுக்கு வரவுள்ளதாகவும் உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (6-49)

# பெண் ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

அரச சேவையிலுள்ள ஆண் ஊழியர்களுக்கான விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் போன்று பெண் ஊழியர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு வழங்கப்பட்ட கால எல்லை எதிர்வரும் ஜுன் மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென அரசாங்க உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி திசாநாயக்க அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புவோர் உரிய படிவத்தைப் பூரணப்படுத்தி, திணைக்களத் தலைவரிடம் கையளிக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (6)

# லசந்தவுக்கு சர்வதேச பத்திரிகை அமைப்பின் 'நாயகன்' விருது

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் மறைந்த லசந்த விக்ரமதுங்கவுக்கு சர்வதேச பத்திரிகை அமைப்பு, உலக பத்திரிகை சுதந்திரத்தின் நாயகன் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

இந்த அறிவிப்பு நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்டது.

இதேவேளை, லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஐந்து தொலைத்தொடர்புக் கோபுரத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட அழைப்புகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு கல்கிசை பிரதான நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பம்

(பொன்னாலை)

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ளூர் உருளைக்கிழங்குகளில் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அறுவடை செய்யப்படும் உருளைக் கிழங்குகள் வலிகாமம் மேற்கு, வலி.தென்மேற்கு மற்றும் வலி.தெற்குப் பிரதேசங்களில் உள்ள சந்தைகளுக்கு தாராளமாக எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடை செய்யப்படும் இக் கிழங்குகள் வியாபாரிகளுக்கு 30 ரூபா முதல் 35 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை கொழும்பிலிருந்து வரும் கிழங்கின் விலை மிகக் குறைவாக இருப்பதால் தமது கிழங்கை விலைக்கு விற்க முடியாதிருப்பதாகவும் இதனால் தமக்கு பெரிய இலாபம் எதுவும் இல்லாதிருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (6-49)

# அரசியலில் நிரந்தர நண்பர்களோ நிரந்தர பகைவர்களோ கிடையாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தர பகைவர்களும் இல்லை. காலத்தின் தேவையை அடையாளம் கண்டு அதற்காகச் செயற்படுவதே பொறுப்புணர்வுள்ள ஒரு நல்ல அரசியல்வாதியின் முக்கிய கடமையாகுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'நுஆ' கட்சியின் தலைவியும், அமைச்சருமான பேரியல் அஷ்ரப் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட வைபவம் நேற்று முன்தினம் முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், தமது விழுமியங்களைப் பாதுகாத்துக்கொண்டு ஏனைய சமூகத்தவருக்கும் மதிப்பளித்து நல்லிணக்கத்தோடு வாழ இலங்கை மக்கள் இப்போது ஆர்வம் காட்டுகின்றனர்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள 'நுஆ' எடுத்த தீர்மானம் நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்துள்ளது என்றும் கூறினார். (6)

# கட்டுநாயக்காவில் பெண்ணொருவரின் எலும்புக்கூடு பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க,வெலபட வீதியின் காட்டுப் பகுதியில் இனந் தெரியாத பெண் ஒருவரின் எலும்புக்கூடு சீதுவை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் சடலத்தின் தசைப்பகுதிகள் அழிவடைந்து எலும்புக்கூடு மாத்திரம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் இரு கைகளும் கழன்று வயல் வீதியில் அடித்துச் செல்லப்பட்டு இரு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எலும்புக்கூட்டின் பகுதியையும் கண்டெடுக்கப்பட்ட உடைகளையும் வைத்துப் பார்க்கும் போது சடலம் இளம் பெண் ஒருவருடையதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவ இடத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த நீர்கொழும்பு மேலதிக நீதிவான் உபுல் ராஜகருணா பிரேத பரிசோதனை செய்யுமாறு நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார். சீதுவை பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (6)

# வன்னி மாவட்டத்தில் இரு சுயேட்சைக்குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மேலும் இரு சுயேட்சைக் குழுக்கள் தமது கட்டுப்பணத்தை நேற்று வவுனியா செயலகத்தில் செலுத்தியுள்ளன.

அப்துல் கபூர்நவாஸ்தீன், விநாயகமூர்த்தி சகாதேவன் எனும் இரு சுயேட்சைக் குழுத் தலைவர்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

இதேவேளை, ஜே.வி.பி கட்சியின் சார்பில் நியமன விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான பத்திரங்கள் நேற்று வவுனியா செயலகத்தில் உதவி தெரிவத்தாட்சி அலுவலர் எஸ்.சுதாகரனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

ரிகிருலாகே சுனில் பிரேமரத்ன என்பவர் நியமனப் பத்திரத்தை பெற்றுக் கொண்டுள்ளார். (6)

# சமாதான நீதிவான் பதவி வழங்கும் நடைமுறையில் மாற்றம்

(கொழும்பு)

சமாதான நீதிவான் பதவி வழங்கும் தற்போதைய நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த 15ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள புதிய தீர்மானம் குறித்து நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத் கம்லத் அறிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின் கீழ் சமாதான நீதிவான் பதவி நியமனம் பெறும் ஒருவர் சமூகத்திற்கும் சமுதாயத்திற்கும் பாராட்டத்தக்க, சேவை யாற்றுகின்ற அரச மற்றும் பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள வராகவும் சிறப்புரிமை பெற்ற பிரஜைகளாகவும் நீதியமைச்சினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதேனும் துறையில் பிரசித்தி பெற்றவர்களாகவும் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுவ தால் மேற்குறித்த தகைமைகளைக் கொண்டுள்ள பெண்களாகவும் இருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் சமூகப் பணிக்காக அர்ப்பணிப்புச் செய்யக்கூடிய 30 முதல் 65 வயதுக்கிடைப்பட்டவர் களாகவும் க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் எனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து பகிரங்க அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் கடந்த காலங்களில் சமாதான நீதிவான் பதவி நியமனம் வழங்கும் போது பிரஸ்தாப தகைமைகள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் தீர்மானம் குறித்து வரவேற்புத் தெரிவித்துள்ள மக்கள் புதிய நடை முறையினால் குளறுபடிகள் இடம்பெறுவதற்கு வாய்ப்பிருக்காது எனவும் தெரிவித்தார். (6)


வெளிநாட்டு வேலை வாய்ப்பு

KURDISTAN

குர்திஸ்தான் நாட்டின் தலைநகர் ERBIL சர்வதேச விமான நிலையத்தில்

(ERBIL INTERNATIONAL AIRPORT)

உடனடி வேலை வாய்ப்பு

14 நாட்களுள் வீசா பெற்று பயணம் மேற்கொள்ளலாம்.

வெளிநாட்டு முகவருடன் நேர்முகப் பரீட்சை

23.02.2010 (செவ்வாய்கிழமை).

CLEANERS - AIR PORT - REQ No.100

100 விமானநிலைய கிளீனேர்ஸ்.

மாதச் சம்பளம் ரூபா.28,750/= + மேலதிக கொடுப்பனவு உண்டு.

MONTHLY SALARY - US$ 250/-

(S.L.Rs.28,750/=)+ O.T Available.

✻ தங்குமிட வசதி இலவசம் ✻ உணவு இலவசம் ✻ மருத்துவ வசதி இலவசம்.

✻ ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).

வயது: 21+ தொடக்கம் 32 வரை.

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது MR.R.Guna (குணா) என்பவருடன் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வரவும் .

மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

Terms & Conditions

Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.

உங்களது பாஸ்போட் (எல்லா நாட்டுக்குமான-ALL COUNTRIES), 12 பாஸ்போட் Size கலர் படங்களுடனும் (White Background) 23.02.2010 செவ்வாய்கிழமை கொழும்பில் 375, டாம் வீதியில் உள்ள எமது காரியாலயத்திற்கு நேரில் வரவும். ஆங்கில அறிவு அதிகம் வேலையில்லை. இது ஓர் அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

☆ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு.☆

இலங்கையர் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு

TRANSSTAR-

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,

375, Second Floor, Dam Street, Colombo 12.

(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)

Tel: 011 - 471 8936 Mobile: 077-826 3228

S.L.Bureau Labour Licence : 1311.

S.L.Bureau Approval AL/1311/Advt/02/10.

(Near Hulftsdorp Courts - Colombo)

(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)

(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)


# கோத்தபாயவை பிரதமராக நியமிக்குமாறு அழுத்தம்?

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து அவரை பிரதமராக்க வேண்டும் என பெரும்பாலானோர் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்திருப்பதாகவும் இதற்கு பாதுகாப்புச் செயலாளரின் இணக்கமும் கிடைத்துள்ளதாகவும் அலரி மாளிகைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஆகியோர் இந்த யோசனையை செயற்படுத்துவதற்காக பெரும் அக்கறைச் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கமைவான பிரசார நடவடிக்கைகள் ட்ரை அட் விளம்பர நிறுவனத்தின் திலித் ஜயவீரவினால் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

மேலும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அரசியல் நுழைவை அடுத்து இராணுவத்துறையில் ஏற்பட்டுள்ள பாரதூரமான குழப்பம் மற்றும் பதற்றத்தை ஓரளவேனும் தணிக்க வேண்டுமானால் கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்கள் பிரதமர் பதவியில் அமர்த்தப்படுவது முக்கியமானது எனவும் ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. (6)

# அரசுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஆயுர்வேத மருத்துவ திணைக்களத் திற்கு முன்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் ஊடக அடக்குமுறை எதிர்க்கட்சி மீதான நடவடிக்கை ஆகியவற் றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பல்கலைக்கழக மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# பிரதமர் வேட்பாளர் யாரென்பது வேட்பு மனுத்தாக்கலின் பின் தெரியும்

## அமைச்சர் டளஸ் அழகப்பெரும

(கொழும்பு)

பிரதமர் வேட்பாளர் யார் என்று கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்றுமில்லை. மனுத்தாக்கல் செய்த பின்னர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்று தெரியும் என்று போக்குவரத்து அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டளஸ் அழகபெரும தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட செய்தியாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

வேட்பு மனுவில் பிரதமர் வேட்பாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று சட்டத்தில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிட்டிருக்கவில்லை. அரசியல் அமைப்பிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதனால் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் தெரிந்து கொள்வீர்கள் என்றார். (6)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 12

யாழ்ப்பாணன் வடஇலங்கையிலுள்ள மணற்றிடரை விபீஷணனிடமிருந்து பெற்றான் என *வையாபாடல்* கூறும். ஆனால் *கைலாயமாலை* வரராசசிங்கனிடமிருந்து வடஇலங்கையை யாழ்ப்பாடி பரிசிலாகப் பெற்றான் என பொருள்படுமாறு கூறுகின்றது. யாழ்ப்பாணன் தனது பிரதேசத்தினை ஆளுவதற்கு ஒரு புதல்வனை அனுப்புமாறு வடநாட்டு மதுரையில் உள்ள புழகேது மன்னனை வேண்டினான் என்றும் அவ் வேண்டுகோளுக்கிணங்கிய புலகேது மன்னன் கையொன்று சொத்தியாக விருந்த தன் புதல்வனை அனுப்பிவைத் தான் எனவும் *வையா* கூறுகின்றது.

இக்கதையிலே கவனிக்க வேண்டியது யாழ்ப்பாணத்து முதல் அரசன் மதுரையில் இருந்து வந்தான் என்ற மரபு. வடநாட்டு மதுரை என்பது (இலங்கைக்கு) வடக்கிலேயுள்ள பாரதநாட்டு மதுரை எனக் கொள்வோமாயின் யாழ்ப்பாணத்தை ஆண்ட முதல் அரசன் பாண்டியரின் மதுரையிலிருந்து வந்தான் என்ற ஐதீகத்தையே *வையாபாடல்* குறிப்பிடுகின்றதென கொள்ளவேண்டும்.

புலகேது, குலசேகரன் ஆகிய இரு சொற்களும் ஒரு பொருளைத் தருகின்றமையினால் (மாறவர்மன்) குலசேகரன் என்ற பாண்டிய மன்னனையே *வையா பாடல்* மதுரையில் ஆண்ட புலகேது என குறிப்பிடுகின்றதெனக் கருதலாம்.

ஆரியச்சக்கரவர்த்திகளுள் முதல்வனாகிய முதலாம் சிங்கை ஆரியன் மதுரையில் ஆண்ட பாண்டியனின் மகன் என **கைலாயமாலை** கூறும். ஆயினும் சிங்கை ஆரியன் என்ற இளவரசனை மதுரையில் இருந்த பாண்டியமழவன் அழைத்து வந்தான் என்று **கைலாய மாலை** சொல்லுகையில் **வையாபாடல்** மதுரையிலிருந்து கூழங்கைச் சக்கரவர்த்தி என்ற இளவரசனை யாழ்ப்பாணன் அழைத்து வந்தான் என்று சொல்லுகின்றது.

இருநூல்களும் ஒரே நிகழ்ச்சி பற்றிய பாண்டிநாட்டால் வந்த ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு அரசனாகியமை பற்றியே கூறு கின்றன வென்றும் கருதலாம். இருநூல்களில் ஒரு நிகழ்ச்சி பற்றிக் கூறினும் அவை கூறும் முறையிலே வேறுபாடுகள் உள்ளன. **கைலாயமாலை** வரலாற்று நிகழ்ச்சிகளை ஓரளவிலாயினும் புரிந்துகொள்ளக்கூடிய முறையிலே எடுத்துரைக்கின்றது. வையாபாடலில் உள்ள மரபில் வரலாற்று நிகழ்ச்சிகள் புனைகதைகளிலே மறைகின்றன.

யாழ்ப்பாணன் கதையுடன் ஆரியச்சக்கரவர்த்திகளின் தோற்றத்தை விளக்கும் மரபும் கலப்புற்றுளதென்பதற்கு வையாபாடலிலே யாழ்ப்பாணன் கதைக்கு முன்னுரைபோல வரும் இராமாயணக் கதையும் ஓரளவிற்கு ஆதாரமாயுள்ளது. இராவண சங்காரத்தின் பின்பு இராமர் திரும்பிச் செல்லுமிடத்து சேதுவெனப்படும் இராமேஸ்வரத்தில் ஒரு சிவாலயத்தை அமைத்து அங்கு ஆராதனை செய்வதற்கென 512 அந்தணர்களைக் குடியிருத்தி அவர்களுள் இருவருக்கு “ஆரிய வேந்து” (ஆரியச்சக்கரவர்த்தி) என்ற புகழ்மிக்க விருதினையும் விடைக்கொடி முதலான அரச சின்னங்களையும் வழங்கினார் என்பது மரபு. அம்மரபினைச் **செகராசசேகர மாலை** மேல்வருமாறு நயம்பட எடுத்துரைக்கின்றது.

## வையாபாடல்

எழில்வாய்ந்த மணிமவுலித் துளவணிமாற சரதன்
சேயென வந்தெய்தித்
தொழில் வாய்ந்த விளவலொடு சென்றுமுனி
வோனி னருள்
சுரந்து காத்துப்
பொழில்வாய்ந்த மிதிலைநகர் வில்லிறுத்துத்
திருவை மணம்புரிந்து வெண்சங்
குழிவாய்ந்த மணிகொழிக்குந் தன்னகர்
வந்தன்னை தரு
முரையை வேண்டி
மின்னுட னெடிய கானகம் புகுந்து
விராதனை மாய மாரீசன்
றன்னை வாலியையேழ் மராமரங்களை வெஞ்
சாயக மொன்றினாற் றடிந்து
மன்னு நீர்வேலை யடைத்தடலிலங்கை
வளநகர் புகுந்தெழிற் கும்ப
கன்னனை யரக்கர் கோவினைச் செயித்துக்
கமல நாயகி சிறை கடிந்து
கருங்கடற்சேனை வெள்ளமுந் தானுங்
கந்தமால் வரைப் புறத்தணுக
விருங்கதத் தரக்கன் சாயை விட்டகன்ற
வியல்பினைத் திருவுளத்தெண்ணி
யருங்கலைப் பொதிய மாமுனிக்குரைப்ப
வவனுமத் தலத்தின தியல்பைப்
பெருங்கதைப் படுத்த வதிசயித்தந்தப்
பெருங் கதையாதரம் பிணிப்ப
அந்தமாதலத்தி லரன்றனைத் தாபித்
தருச்சனை புரிந்து தன்னாமஞ்
சிந்தையா லருளியப்பதி தனக்குத்
திருப்பெயரென்ன தேயாக்கி
நந்தலில் பஞ்சக் கிராமவேதியராய்
நான்மறைப் பொருளுளம் பிரியாப்
பைந்தொடைப் பாசுபதர் களைஞ்ஞூற்றுப்
பன்னிருவரை வரவ ழைத்து
பூசனை செய்ம்மினீரெனக் கருணை
புரிந்தவர் தங்களிலிருவர்
காசினி தாங்கும் படிவரங் கொடுத்துக்
கமழ்செழுந் துளபமாலிகையு
மாசறு சுருதி யாரிய வேந்தென்
றணிமணிப் பட்டமுங் கொடுத்துத்
தேசுறு குடையு மொற்றையும் வெற்றி
திகழ்விடைத் துவசமு நல்க

**கைலாயமாலை** குறிப்பிடும் செயவீரன் எனும் சிங்கையாரியனே கூழங்கைச் சக்கரவர்த்தியென மயில்வாகனப்புலவர் கருதினார். எனவே, கைலாயமாலையிலே வருந் தகவல்களைப் பெயர்தெழுதி விட்டுச் சிங்கையாரியனைக் குறித்து, “இவ்வரசனுக்கு ஒரு கை கூழாங்கையாயிருந்ததனால் இவனைக் கூழாங்கையாரியன் என்றும், விசய கூழங்கைச் சங்கரவர்த்தி என்றுங் சொல்வார்கள்” எனக் கூறுகின்றார். முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகிய இருவரும் காலிங்கமாகனே தமிழ் நூல்களிலே கூழங்கைச் சக்கரவர்த்தி எனப் பெற்றுள்ளான் என்பர். முதலியார் இராசநாயகம் கூழங்கைச் சக்கரவர்த்தி பற்றி மேல்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

“அவனும் (மாகன்) அவனது ஆதரவாளரும் மலையாளிகளெனவும் தமிழரெனவும்” வரலாற்று நூல்களிலே வர்ணிக்கப்படுவதாலும் அவன் (மாகன்) கலிங்க விசயவாகு என வழங்கியதாலும் மாகன் யாழ்ப்பாண அரசனொருவன் என்பது தெளிவு. அவன் இருபத்தொரு ஆண்டுகளாக இலங்கையின் அதிபதியாக விருத்ததாற் புகழ்பெற்ற செகராசசேகர மன்னருள் மாகனும் ஒருவனாதல் கூடும். இவனே முதலாம் ஆரியச்சக்கரவர்த்தியாகலாம்.

“கலிங்க விசயவாகு எனும் மாகனின் பெயருடன் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி எனும் பெயர் பெரிதும் ஒத்திருப்பதால் மாகனே கூழங்கைச் சக்கரவர்த்தியாதலும் கூடும். கையொன்று சொத்தியாக விருந்ததினாலே கூழங்கையன் என்ற பெயர் வந்ததென்ற ஐதீகம் யழ்ப்பாண வைபவமாலையிலே முதன் முதலாக வருகின்றது.

அதற்கு முந்திய நூல்களான கைலாயமாலை, வையாபாடல் என்பவற்றில் அக்கதை இடம்பெறவில்லை. எனவே காலிங்க என்ற சொல் கூழங்கை எனப் பிழையாக வாசிக்கப்பட்டதென்று எண்ணலாம். மயில்வாகனப் புலவரோ பின் (அவரின்) நூலைப் பிரதிசெய்தவர் களோ சியகாலிங்கச் சக்கரவர்த்தி என்னும் பெயரை விசய கூழங்கைச் சக்கரவர்த்தி என்று எழுதியிருக்க வேண்டும்.

பேராசிரியர்
சி.பத்மநாதன்

முதலியார் இராசநாயகம் சொல்வன சாதுரியமானவை, எனினும் பொருத்தமற்றவை. மயில்வாகனப் புலவரோ யாழ்ப்பாண வைபவமாலையின் ஏடுகளைப் பிரதி செய்தவர்களோ காலிங்கச் சக்கரவர்த்தி என்பதை கூழங்கை சக்கரவர்த்தி என மாற்றிவிட்டனர் என்பது தவறான கருத்து. (தொடரும்)


## நீரிழிவை வெற்றிகொள்வோம்

நீரிழிவு நோயுடன் சகஜவாழ்க்கை சாத்தியமா?
அறிய வேண்டும் போல் இருக்கிறதா
வாருங்கள்

## மாபெரும் விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும்

இடம்:- மருத்துவபீடம் - யாழ்ப்பாணம்
காலம்:-21.02.2010 பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி
27.02.2010 வரை தினமும் 8.30 (காலை) மணி தொடக்கம் 7.30 மணிவரை




- ★ நீரிழிவு நோயாளர்களுக்கான உணவுமுறை, மருந்துகள் பற்றிய விளங்கங்கள், உடற்பயிற்சி முறைகள் என்பன.
- ★ சகல பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்.
- ★ தினமும் நிகழ்வில் பங்குபற்றுவர்களுக்கான போட்டிப்பரீட்சைகள் நடைபெறும், வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படும்.
- ★ நீரிழிவு நோயினை கண்டறிதலுக்கான குருதிப்பரிசோதனையும் ஆலோசனை வழங்கலும்
- ★ இன்சுலின் பெறும் நோயாளிகளுக்கு இலவச இன்சுலின் PEN விநியோகம்
- ★ குறைந்தவிலையில் சுகாதாரம் சம்பந்தமான நூல், இறுவெட்டு ( CD) விற்பனை
- ★ உங்கள் நிறையை குறைப்பது எப்படி பொருத்தமான ஆலோசனைகள்
- ★ சலரோக நோயாளிகளுக்கான ஐஸ்கிறீம் ( Ice cream) விநியோகம்
- ★ நீரிழிவு நோயினால் மனத்தாக்கங்களிற்கு உள்ளானவர்களுக்கான மன ஆறுதல்களுக்கான வழிமுறைகள், பயிற்சி முறைகள், பொழுதுபோக்கு முறைகள் என்பன
- ★ மன அமைதிக்கான இசையும், இறுவெட்டு (CD) வெளியீடும்

**இக்கட்டுரையானது நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்-போதனா வைத்திய சாலையினால் நடத்தப்படும். 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' கண்காட்சியை முன்னிறுத்தி பிரசுரிக்கப்படுகின்றது.**

(இ)


## இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 20 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட நிவாரண அளவே தற்போதும் வழங்கப்படுவதாகவும் தற்போது இந்த இடம் பெயர்ந்தோருக்கு ஒரு மாதத்திற்கென வழங்கப்பட்டு வரும் நிவாரணங்கள் ஒரு வாரத்திற்கும் போதுமானதல்ல எனவும் தெரிவித்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் இது 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களின் அளவாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட ஒரு குடும்பத்திற்கு 6 கிலோ அரிசியும், 4 கிலோ கோதுமை மாவும், சீனியும் பருப்பும், சமையல் எண்ணெயும் வழங்கப்படுகின்றன.

இவை 1260 ரூபாய் பெறுமதியான பொருட்களாகும். இந்த நிலையில் இதனைக் கொண்டு ஒரு குடும்பம் எவ்வாறு தமது தேவைகளை சமாளிக்க முடியும் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அனைத்து உடமைகளையும் இழந்து யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தோர் பற்றாக்குறையான நிவாரணங்களை கொண்டு சமாளிக்க முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## எதிர்க்கட்சித்தலைவர் கொழும்பில் போட்டி

(கொழும்பு)

ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி யானைச் சின்னத்தில் கொழும்பில் போட்டியிடவுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதித்தலைவர் கருஜெயசூரிய கம்பகா மாவட்டத்தில் போட்டியிடுவார் என்றும் அவர் கூறினார்.

தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான பேச்சுவார்த்தையை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுதந்திரக்கட்சியின் மங்கள பிரிவு ஆகியவற்றுடன் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.(6)

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(பொன்னாலை)

மூளாய் - பொன்னாலைக்கு இடைப்பட்ட பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதுடன் வாகனங்களும் பழுதடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் பாடசாலை, கூட்டுறவு வைத்தியசாலை, தபாற்கந்தோர், சந்தை எனப் பொது ஸ்தாபனங்கள் பல உள்ளன. அதனால் மக்களின் நடமாட்டமும் மிக அதிக மாகவுள்ளன. இதனாலே விபத்துக்களும் மிகக்கூடுதலாக ஏற்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பாக பாடசாலைக்குச் செல்லும் மாண வர்கள் காலையிலும் மாலையிலும் பெருஞ் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே இவ்வீதியை சம்பந்தப்பட்டவர்கள் உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.(4-49)

# குடாநாட்டில் நன்னீர் மீன்பிடியை மேம்படுத்துமாறு கோரிக்கை

(கோண்டாவில்)

யாழ்.குடாநாட்டில் நன்னீர் மீன்பிடித் துறை மிகவும் குறைந்த நிலையில் காணப் படுவதாகவும் கிராமப்புற குளங்களின் அருகில் மிதிவெடிகள் அகற்றப்படாமல் காணப்படுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நீர் உள்ள கிராமப்புற குளங் களை மீன்பிடிக்கேற்றவாறு தயார்ப்படுத்தி நல்லின மீன் குஞ்சுகளை வளர்ப்பதன் மூலம் கிராமிய நன்னீர் மீன்பிடியை அபிவி ருத்தி செய்யமுடியும் எனக் குறிப்பிடப்படு கிறது.

இதனால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய நிலையில் தொழில் வாய்ப்பற்றி ருப்போரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும் இம் மீன்பிடித்துறையை வளப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4-36)

# மகளிர் தினத்தை முன்னிட்ட போட்டிகள்

(கோண்டாவில்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சன சமூக நிலையத்தின் மாதர் அபிவிருத்தி சங் கத்தினர் மகளிர்களுக்கிடையேயான பல் வேறு போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிலைய பொன் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் பாடசாலை மாணவிகளுக் கான போட்டி, திறந்த போட்டி என இரு பிரிவு களாக நடைபெறவுள்ளது.

இதில் மாலைகட்டுதல், கோலம் போடு தல், அலங்கார உற்பத்தி போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் பங்குபற்ற விரும்பு வோர் போட்டிக்குத் தேவையான பொருட் களைக் கொண்டு வருமாறும் அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.(6-4-36)

## 65 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஞானவீர சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழா வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் க.ம.இராஜேந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல் லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந் தனன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர் களாக சமூக அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி சு.சந்திராதேவி, நல்லூர் பிரதேசசபை செயலாளர் மே.சாந்தசீலன், கூட்டுறவாளர் பெ.கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)




## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையினரால் பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவதற்கான இறுதி முடிவு எடுக்கும் கூட்டமொன்று யாழ்.சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் இன்று சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள் ளதாக மகாசபையின் பொதுக் காரியதரிசி அறிவித்துள்ளார். (6-ப)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் ஸ்ரீஇராம கிருஷ்ணரின் 175ஆவது ஜெயந்தி தினத்தன்று வெளியிடப்பட்ட ஸ்ரீஇராம கிருஷ்ணர் பற்றிய நூலின் முதற் பிரதியை சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா நில நீர்வள ஆய்வாளர் க.நடனசபாபதியிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# பொதுக்கூட்டமும் பாராட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியின் பாராட்டு விழா நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில்' தலைவர் ம.வித்தியா னந்தநேசன் தலைமையில் நடைபெறவுள் ளது. (6-14)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

*சிறகை விரிப்போம்* நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி குடும்பவள துணை நில்லயத்தில் நடைபெறவுள்ளது.

யோசப்பாலா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையினை அகவொளி இயக்குநர் அருட்பணி எஸ்.யே.இராஜநாய கம் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக கொழும்பு உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவதாசும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப் பாணம் முன்னாள் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், திருமறைக் கலாமன்றம் அழகியற் கல்லூரி அதிபர் திருமதி பி.எவ். சின்னத்துரை, நாற்சதுர சுவிசேஷ சபை அருட்பணி எஸ்.சிவயோகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (6-14)

# வடமாகாண ஆளுநரால் மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரை சுவாமி மகா வித்தியாலயத்திற்கு வடமாகாண ஆளுநரால் புதிய மின்பிறப்பாக்கி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வேலணை சரஸ்வதி வித்தியாலய மேல் மாடிக் கட்டடத் திறப்பு விழா நேற்று நடை பெற்றபோது வேலணை சேர் வைத்தி லிங்கம் துரைசுவாமி வித்தியாலய அதிபரிடம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி மின்பிறப்பாக்கியைக் கையளித் துள்ளார். (6-14)

# மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக் கூடம் அமைப்பின் ஏற்பாட் டில் இடம்பெற்றுவரும் சிந்தனை அரங்குத் தொடர்-5 இன் கருத்தரங்கு மனித உரிமை களின் சமகால கருத்தியல் சார் சர்ச்சைகளின் பிரதிபலிப்புக்கள் எனும் தலைப்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் 182, பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.ரி. (IIT) யாழ். கிளை வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் கருத்துரையினை இலங்கை மனித உரிமைகள் இல்ல நிர்வாகப் பணிப் பாளர் செரின் சேவியர் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனை வரையும் பங்குபற்றுமாறு சிந்தனைக் கூடத் தின் அமைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச் சந்திரன் தெரிவித்துள்ளார். (6-14)

# 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நன்றி செலுத்தும் வழிபாடும்

வண்ணார்பண்ணை வெஸ்லி மெதடிஸ்த திருச்சபையின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நன்றி செலுத்தும் வழிபாடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இறைச்செய்தியை வாழைச் சேனைசேகர முகாமைக்குரு அருட்திரு ஞா.அண்டனி சதீஸ் வழங்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் நன்றி செலுத்தும் வழிபாடு, பாடல்வேளை, திருமறைப்படிப்பு, திருமறை அறிவு, பாடல் போட்டிகள், ஐக்கிய விருது சேகர கலை நிகழ்வுகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளதாக திருச்சபையினர் தெரி வித்துள்ளனர். (6-4)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் கே. குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவ கச்சேரி பிரதேச கல்வி அதிகாரி கே.சிவா னந்தமும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.நாகராஜாவும் கௌரவ விருந்தினர்களாக ஜே/309 கிராமசேவகர் ரி.மகேந்திரன், ஜே/308 கிராமசேவகர் கே. உபேந்திரனும் கலந்துகொள்ளவுள் ளனர். (6-14)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவரட்ணராஜா மைதானத்தில் அதிபர் இரா ஜேஸ்கரம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவரும் பொறியியலாளருமான கே.ஸ்ரீஸ்கந்தராசா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியருமான வி. சண்முகலிங்கம் கலந்து கொள்ளவுள் ளார்.

மேலும் வெற்றிபெற்ற மாணவர்களுக் கான பரிசில்களை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட மருத்துவ அலுவலர் திருமதி ஜெய ராணி ஸ்ரீஸ்கந்தராஜா வழங்கிக் கௌர விக்கவுள்ளார். (6-4)

✠✠✠

(மருதங்கேணி)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் எஸ்.நந்தகுமார் கலந்து சிறப்பிக் கவுள்ளார். (4-35)

# விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச விதாதா வள நிலை யத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள ஆறு மாதங்கள் கொண்ட DTP கணனிப் பயிற்சி நெறியை கற்பிப்பதற்கும் கணனி ஆய்வு கூடத்தில் கடமையாற்றுவதற்கும் தகைமை யுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்பவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய படிவத்துடன் தகைமைச்சான் றிதழின் பிரதியையும் இணைத்து எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு வலிமேற்கு பிரதேச செயலர் தெரிவித்துள் ளார். (6-4)

# ஆசிரியர் கலாசாலை பெறுபேறு வெளியானது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கடந்த வருடம் நடைபெற்ற 2007/2008 ஆம் வருட ஆசிரிய மாணவர்களது இறுதிப் பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக் களத்தால் வெளியிடப்பட்டுள்ளது. பெறுபேறு களை கலாசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். பெறுபேற்றுச் சான்றிதழ்கள் கூடிய விரைவில் பெற வசதி செய்யப்பட்டுள் ளதாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலைஅதிபர் மலர் சின்னையா அறிவித்துள்ளார். (சு)

# கார்த்திகை உற்சவம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயத்தின் கார்த்திகை உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் விசேட நாளில் பூசைகள் மற்றும் இலட்சார்ச்சனை என்பன இடம்பெற்று சுவாமி வீதி உலாவரும் காட்சியும் இடம் பெற வுள்ளது. (4-35)

# சிறப்பு அகதிகள்முகாம்கள் சிறைகள் போன்று செயற்பட்டு வருவதால் அவற்றை மூடவேண்டும்

## உண்மையை கண்டறியும் குழு தமிழக அரசை வலியுறுத்து

(சென்னை)

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அமைதி வழியில் போராடிய அகதிகள் மீது, கொடு ரமாக தடியடி நடத்திய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறப்பு அகதிகள் முகாம்கள் சித்திரவதை முகாம்களாக மாறி வருவதால் செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாம்களை மூடவேண்டும் என்று உண்மை கண்டறியும் குழு , தமிழக அரசை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அகதிகளுக்காக தமிழகம் முழுவதும் மூன்று அகதிகள் முகாம்கள் செயல் பட்டு வருகின்றன.

புலிகளுடன் தொடர்புடையதாக சந்தேகப்படுவோர், ஏதேனும் குற்றம் தொடர்புடையவராக கருதப்படுவோர் செங் கல்பட்டு மற்றும் பூந்தமல்லியில் உள்ள சிறப்பு முகாம்களில் வைத்து விசாரிக்கப் படுகின்றனர்.

சொங்கல்பட்டு முகாமில் உள்ள அகதிகள் 34 பேரும் தங்கள் மீதான வழக்குகளை விரைவுபடுத்த வேண்டும். தங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் பற்றிய விபரங்களை தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தி கடந்த 2 ஆம் திகதி உண்ணாவிரதம் இருந்தனர். பொலிஸார் அவர்கள் மீது தடியடி நடத்தி 15 பேரை வேலூர் சிறையில் அடைத்தனர்.

பொலிஸார் நடத்திய தாக்குதல் குறித்து உண்மையைக் கண்டறிவதற்காக மனித உரிமை ஆர்வமுள்ள அமைப்புகள் குழுவொன்றை அமைத்தது.

பேராசிரியர் மார்க்ஸ், வக்கீல் தமயந்தி , விநாயகம் உள்ளிட்ட குழுவினர் ஆய்வு மேற் கொண்டனர்.

தங்களின் ஆய்வு குறித்து உண்மை கண்டறியும் குழுவினர் சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது, செங்கல்பட்டு சிறப்பு அகதிகள் முகாமில், ''எங்கள் மீதான வழக்குகள் பற்றி தெரிவியுங்கள், வழக்குகளை விரைந்து முடித்து எங்களை விடுவியுங்கள்'' எனக் கேட்டு அமைதி வழி உண்ணாவிரதம் இருந்தோர் மீது பொலிஸார் கொடூர தாக்குதல் நடத்தியுள்ளனர். போராட்டத்தை தூண்டியதாக 15 பேரை வேலூர் சிறையில் அடைத்துள்ளனர். தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மீதமுள்ள 18 பேர் எந்த வசதியுமின்றி உள்ளனர். சிறப்பு அகதிகள் முகாம்கள், சிறைகள் போல் செயல்பட்டு வருவதால் பூந்தமல்லி, செங்கல்பட்டு, சிறப்பு அகதிகள் முகாம்களை தமிழக அரசு மூடவேண்டும். அங்குள்ளோரே பொதுமுகாமிற்கு மாற்ற வேண்டும் இவ்வாறு குழுவினர் தெரிவித்துள்ளனர். (6)

# திருப்பதி கோவிலில் இரும்பு வேலி பாதுகாப்பு

திருப்பதி திருமலையில் உள்ள ஏழு மலையான் கோவிலுக்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றார்கள்.

தீவிரவாதிகளால் திருப்பதி கோ விலுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக மத்திய உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து திருப்பதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 35 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே திருமலையில் உள்ள கோவிலைச் சுற்றிலும் இரும்புக் கம்பி வேலி அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (6)

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை துப்பாக்கி சூடு

## மீன்பிடி சாதனங்கள் சேதம்

(இராமேஸ்வரம்)

கச்சதீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்திய இலங்கைக் கடற் படையினர் மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர். இராமேஸ்வரத்திலிருந்து கடந்த் புதன்கிழமை கடலுக்குச் சென்ற மீனவர்கள், இரவு 8 மணியளவில் கச்சதீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, ரோந்து வந்த இலங்கைக் கடற் படையினர், முதலில் வானத்தை நோக்கியும் பின் மீனவர்களை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். படகின் அடிப்பகுதியில் மீனவர்கள் மறைந்து கொண்டதால், நெருங்கி வந்த கடற்படையினர்,படகிலிருந்த வலைகளை வெட்டி கடலில் வீசி, மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இதேபோல் 20க்கும் மேற்பட்ட படகுகளில் வல்லைகளை சேதப்படுத்திவிட்டு, மீன்களை யும் அள்ளிச் சென்றதாக நேற்று முன்தினம் காலை கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித் தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இரவில் நடுக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, பெரிய படகில் வந்த இலங்கைக் கடற்படையினர், முதலில் வானத்தை நோக்கிச் சுட்டனர்.பின், படகை நெருங்கி மீன்பிடி வலைகளை வெட்டி விட்டுச் சென்றனர்.

நாங்கள் சிறிது நேரம் கழித்து, கடலில் வீசிய வலையை எடுக்க அப்பகுதிக்கு சென்றபோது, மீண்டும் வந்த இலங்கைக் கடற்படையினர் எங்களது படகை நோக்கி சுட ஆரம்பித்தனர்.

நாங்கள் உயிர் பிழைத் தால் போதும் என்று, வலைகளைக் கூட எடுக் காமல் கரைக்கு திரும்பிவிட்டோம் என்றனர். இச் சம்பவம் குறித்து புலனாய்வுத்துறை யினர் விசாரித்து வருகின்றனர். (6)

# பாரதச் செய்திகள்

## விஜயசாந்தி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்



தெலுங்கானா மாநிலம் அமைப்பதில் மத்திய அரசு காலம் தாழ்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. உடனே தெலுங்கானா மாநில அறிவிப்பை வெளியிடவேண்டுமென்று வற்புறுத்தி தெலுங்கானா ராஷ்டிரசமிதி கட்சியைச் சேர்ந்த விஜயசாந்தி தனது எம்.பி. பதவியை நேற்று முன்தினம் இராஜினாமா செய்தார்.

இந்தத் தகவலை அவரே நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தெலுங்கானா மாநிலம் அமைப்பது பற்றி ஆய்வு நடத்த அறிவிக்கப்பட்டுள்ள குழுவின் செயற்பாடுகளில் எங்களுக்கு திருப்தி இல்லை. மத்திய அரசின் காலம் கடத்தும் நடவடிக்கை தான் இது.

நான் எனது விலகல் கடிதத்தை பாராளுமன்ற சபாநாயகருக்கு அனுப்பி விட்டேன். தெலுங்கானா பிரச்சினையில் அடுத்த கட்ட போராட்டத்தை தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியின் தலைவர் சந்திரசேகரராவ் விரைவில் அறிவிப்பார் என்றார்.

தெலுங்கானா பிரச்சினையில், தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியைச் சேர்ந்த 10 எம்.எல்.ஏக்கள் , 2 எம்.பிக்கள், ஒரு எம்.எல்.சி. ஆகியோர் பதவி விலகியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## தெலுங்கானா தனி மாநிலம் கோரி இன்று சட்டசபை முற்றுகை போராட்டம்

தெலுங்கானா கோரி 20ஆம் திகதி சட்ட சபை முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று தெலுங்கானா மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

ஐதராபாத்தில் தெலுங்கானா மாணவர்கள் கூட்டுப் போராட்டக் குழுவைச் சேர்ந்த ராஜய்யா நிருபர்களிடம் கூறுகையில் ,

தெலுங்கானா தனி மாநிலம் கோரி நாங்கள் 2 மாதமாகப் போராடி வருகிறோம். ஆனால் மத்திய மாநில அரசுகள் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றை அமைத்து தெலுங்கானா அமைக்கும் திட்டத்தை 11 மாதங்களுக்கு தள்ளிவைத்து விட்டனர்.

இதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். தெலுங்கானா கோரிக்கையை வலியுறுத்தி இன்று ஆந்திர சட்டசபையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவுள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (6)

# வெளிநாடுகளைச் சேர்ந்தோருக்கான விசா தொடர்பில் இந்தியா புதிய நடைமுறை

(புதுடில்லி)

இந்தியாவில் நடக்கும் மாநாடு, கருத்தரங்கு போன்ற நிகழ்ச்சிகளில் பாகிஸ்தான், இலங்கை,சீனா உட்பட எட்டு நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்க வேண்டுமெனில் அவர்களுக்கான விசா பெறுவதற்கு உள் துறை அமைச்சகத்திடம் அனுமதிபெற வேண்டுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா அளிப்பது தொடர்பாக சில புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன. இதன்படி இந்தியாவில் நடக்கும் கருத்தரங்கு, சர்வதேச மாநாடு உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பாகிஸ்தான் , சீனா, இலங்கை, சூடான், வங்கதேசம், ஈரான், ஈராக் மற்றும் ஆப்கானைச் சேர்ந்தவர்கள் பங்கேற்க வேண்டுமெனில் அவர்களுக்கு விசா வழங்குவதற்கு உள்துறை அமைச்சகத்திடம் முறையாக அனுமதிபெற வேண்டும்.

சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடப்பதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னதாகவே உள் துறை அமைச்சகத்திடம் இதுதொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். அனைத்து அமைச்சகங்களும் இந்த விதி முறைகளை கட்டாயம் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநாடுகளில் பங்கேற்கும் மற்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்தியத் தூதரகத்தை அணுகி விசாவுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் இவ்வாறு அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (6)

# பீகாரில் மாவோயிஸ்டுகளின் தாக்குதலில் பழங்குடியினர் 12 பேர் பலியாகினர்

பீகார் மாநிலத்தில் கசாரி கிராமத்தில் மாவோயிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய தாக்குதலில், பழங்குடி மக்கள் 12 பேர் கொல்லப்பட்டார்கள். அவர்களுக்குச் சொந்தமான பல குடிசைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

நூற்றுக்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் நேற்றுமுன்தினம் அந்தக் கிராமத்தைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினார்கள்.

வீடுகளுக்குத் தீயிட்ட அவர்கள், பின்னர் அங்கிருந்த மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர், எரியும் குடிசைக்குள் சிக்கி கருகிய நிலையில், மீதமுள்ளவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த 8 பேரை சமீபத்தில் அந்தக் கிராமத்தினர் பிடித்துக் கொன்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. அதற்கு பழிதீர்க்கும் வகையிலேயே மாவோயிஸ்டுகள் அந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாக அவர்கள் தாக்குதல் நடத்திய இடத்தில் விட்டுச் சென்ற துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்கு வங்க மாநிலத்தில் பாதுகாப்புப் படை முகாம் மீது மாவோயிஸ்டுகள் சமீபத்தில் நடத்திய தாக்குதலில் 24 ஜவான்கள் கொல்லப்பட்டதை அடுத்து,பீகாரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



யூனியன் வங்கிக் கிளை நேற்று சுன்னாகப் புகையிரத வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யூனியன் வங்கியின் பணிப்பாளர் சுனில் அமரசிங்க முதலாவது வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைப்பதையும் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள் : றம்சன்)

## மாதாந்த உதவிப்பணம் பெறும் பயனாளிகளுக்கான மீளாய்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட ஜே/300 சாவகச்சேரி நகர் கிராம சேவையாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் பயனாளிகளுக்கான மீளாய்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இடம்பெறவுள்ளது.

பயனாளிகள் டச்சு வீதியில் அமைந்துள்ள கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு மாதாந்த உதவிப்பண அட்டை, பங்கீட்டு அட்டை, ஆள் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் சமூகம் தருமாறு கிராம அலுவலர் வி.சிவசரணநாதன் அறிவித்துள்ளார். (6-4-29)

# வைராக்கியம் கொண்ட அரசியல் கலாசாரமே தற்போது காணப்படுகிறது

## ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறந்த எதிர்காலம் என்பது அமைச்சர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்குமே உரித்தாகியுள்ளது. பொதுமக்களுக்கு வைராக்கியம் கொண்ட அரசியல் கலாசாரமே தற்போது காணப்படுகிறது என்று ஐக்கிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்ததும் நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்த்திருந்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான செயற்பாடுகளினால் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். எனவே எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் பொது மக்கள் சிந்தித்து சிறந்த முடிவெடுப்பார்கள் என்று நம்புகிறோம் எனவும் அவர் தெரிவித்தார். .

நேற்று முன்தினம் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் .அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போது 62 ரூபாயாக இருந்த ஒரு கிலோ சீனியின் விலை ஜனாதிபதித் தேர்தலின் போது 95 ரூபாவாக அதிகரித்திருந்தது. தற்போது ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து சிறந்த எதிர்காலம் பற்றி கனவு கண்டுகொண்டு ஒரு கிலோ சீனியை 105 ரூபாவுக்கு பெறவேண்டியுள்ளது.

அதேபோன்று ஒரு கிலோ சம்பா அரிசியை 70 ரூபாவுக்கு பெற முடியுமெனவும் அதற்கு அதிகமாக விற்பனை செய்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் எனவும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் ஒரு கிலோ சம்பா அரிசியை 90 ரூபாவுக்கு அதிகமாகவே வாங்க வேண்டியுள்ளது.

சுகாதாரம், கல்வி போன்ற துறைகளும் இன்று பாரிய அளவு வீழ்ச்சியடைந்துள்ளன. எலிக்காய்ச்சல், டெங்கு காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் என.வெவ்வேறு காய்ச்சல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ள போதும் சுக தார அமைச்சினால் அதனை கட்டுப்படுத்துவது தொடர்பில் உரிய நட வடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. கல்வித் துறையிலும் அவ்வாறான ஒரு நிலை மையே காணப்படுகின்றது.

நாம் வளர்ப்போம், நாட்டை கட்டியெழுப்புவோம் என கோடிக்கணக்கில் மக்களுடைய பணத்தை செலவு செய்து நாடு பூராவும் கட்டவுட்களையும் பெனர்களையும் காட்சிக்கு வைத்தார்கள். ஆனால் அனுராதபுரத்திலும் பாகிஸ்தானிலிருந்து தருவிக்கப்பட்ட பொன்னி, சம்பாவை விதைக்க வேண்டியேற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான செயற்பாடுகளை பற்றியே இன்று அனைவரும் பேசுகின்றனர். முதற் தடவையாக எதிரணியில் போட்டியிட ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். அது மாத்திரமல்லாமல் மாற்றுக்கருத்துக்களை வெளியிடுவோர்களையும் ஊடகவியலாளர்களையும் அடக்குமுறைக்குட்படுத்தியுள்ளனர்.

அரசியல் பழிவாங்கல்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள். ஏனைய அரச உத்தியோகஸ்தர்களும் எவ்வித காரணங்களுமின்றி இடமாற்றம் செய்யப்படுவதுடன் சேவையிலிருந்து இடைநிறுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் சிறந்த எதிர்காலம் பற்றி பேசுகின்றவர்களின் வேலைத்திட்டங்கள் இப்படியாகத்தான் இருக்கிறது . இவ்வாறான நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறுவோம் எனவும் கூறுகின்றார்கள். அது ஒரு போதும் நடக்கப்போவதில்லை என்றார். (6)

# ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வரை அரசியல் பேரணிகள் நடத்த தடை

## பொலிஸார் அறிவிப்பு

நேற்று முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வரையில் அரசியல் ரீதியான ஆர்ப்பாட்டங்களோ அல்லது பேரணிகளையோ நடத்தக் கூடாது எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதேவேளை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வது தொடர்பிலும் சில விதிமுறைகளை வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டுமென பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் போது குறித்த வேட்பாளரும் அவரது உதவியாளரும் மட்டுமே பிரசன்னமாக முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேவையற்ற முரண்பாடுகள் மற்றும் மோதல்களைத் தவிர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்றே நாடாளுமன்றத் தேர்தலையும் அமைதியான முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதேவேளை அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் நபர்கள் குறித்து புலனாய்வுப் பிரிவினரும் தகவல்களைத் திரட்ட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சிற்றம்பலம் செல்லையா

திதி– பூர்வ பக்க ஷஷ்டி [20.02.2010]

அன்னை மடியில் 26-02-1928

இறைவன் அடியில் 02-03-2009



அன்பின் ஒளி விக்காய், பாசத்தின் உருவமாய் நின்று,
அறிவு பல ஊட்டி, பண்புடனே பல கற்று,
இன்பமுடன் நாம் வாழ, ஏற்ற எல்லாம் எமக்களித்தீர்!
மனிதகுல மாணிக்கமே! நீதியின் திருவுருவே!!
நேர்மையின் வடிவமே!!!–ஐயா,
காலங்கள் போனாலும் அழியாது உம் புகழுடல்

நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவில்,
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.15,
முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி-4471)



TIENS

வெளிக்கள இணைப்பாளர் தேவை (ஆண்/பெண்)

(Net work Marketing)

*Tiens Lanka Health Care (PVT) Ltd*, சீன நாட்டின் மருத்துவ பொருட்களினை பகுதி, முழுநேர விநியோகஸ்தர்களுக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்தில் கோரப்படுகிறது.

♦18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் தங்கள் சுய விபரக் கோவையுடன் அன்றைய தினம் சமூகமளிக்கவும்.

திகதி:- 22.02.2010
நேரம்:- காலை 9.00 மணி
இடம்:- யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரிப் பிரிவு மண்டபம், 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நேர்முகப் பரீட்சையுடன் கூடிய பயிற்சி பாசறையும், அங்கத்துவம் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.

'ஆர்வமுள்ள அனைவரும் பங்கு பற்றலாம்'



**Tiens Lanka Health Care (Pvt) Ltd**
No-157 DHAMAPALA MAWATHA
COLOMBO-07

யாழ். மாவட்ட தொடர்பிற்கு 0713474128 (459)

# தேர்தலில் ஊழல் இடம்பெற்றதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டால் சர்வதேச உறவுகளில் பாதிப்பு

## அமைச்சர் டளஸ் அழகப்பெரும

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஊழல் மோசடி இடம்பெற்றதாக எதிர்க் கட்சிகளினால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களினால் சர்வ தேச நாடுகளுடனான உறவுகளில் பாதிப்பு ஏற் படக் கூடுமென போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளினால் அரசாங்கத்திற்கு எதி ராக மேற்கொண்டு வரும் இவ்வாறான சதித் திட்டங்களினால் நாட்டின் நன்மதிப்பிற்கு பாதிப்பு ஏற்படக்கூடுமென அவர் குறிப்பிட்டுள் ளார்.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் பொருளாதார நிலை கள் மீது நடத்திய தாக்குதல்களை விடவும் இந்த நிலைமை மோசமானது என சுட்டிக் காட்டி யுள்ள அவர் நாட்டு மக்களுக்கு பாதிப்பு ஏற் படாத வகையில் செயற்பட வேண்டியது எதிர்க் கட்சியின் தார்மீக பொறுப்பாகும் என தெரிவித் துள்ளார்.

மேலும் தேர்தல் மோசடி குறித்த எதிர்க்கட் சிகளின் குற்றச் சாட்டுக்களுக்கும் தேர்தல் முறைப்பாடுகளுக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாந்தோட்டை துறைமுகம் வர்த்தக நோக்கத்தை மட்டுமே கொண்டது

## சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை பகுதியில் அமைக்கப் பட்டு வரும் துறைமுகம் வர்த்தக நோக்கத்தை மட்டுமே கொண்டது. அதில் இராணுவ நோக் கங்கள் எதுவும் இல்லை என சீனா தெரி வித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள சீனா தூதரகத்தின் அரசியல் அதிகாரி சாங் சூகியா மேலும் தெரிவித்துள்ளதாவது,

பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களின் மூலம் தென் ஆசிய பிராந் தியங்களில் சீனா படைத்தளங்களை அமைத்து வருவதாக பல் வேறு நாடுகளும் கருத்துக்களை வெளியிடுகின் றன. ஆனால் நாம் வர்த்தக நோக்கத்திற்கா கவே அபிவிருத்திகளை மேற்கொண்டு வரு கின்றோம்.

மேலும் இலங்கையில் சீனாவின் தலை யீடுகள் அதிகரித்துள்ளது தொடர்பில் இந்தியா தொடர்ந்து கவலை தெரிவித்து வருகிறது. அது சீனாவைக் கண்டு அச்சமடைகிறது.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்படும் துறைமுகம் முழுமையாக வர்த்தக நோக் கத்தைக் கொண்டது. எனினும் இந்தியாவின் கவலை தொடர்பில் நாம் மேலதிக கருத்து எத னையும் கூற விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# வலி.வடக்குப் பிரதேசத்தில் பன்றிகளின் தொல்லையால் பயிர்ச்செய்கை பாதிப்பு

## விவசாயிகள்கவலை

(பொன்னாலை)

வலி. வடக்குப் பிரதேசத்தில் பன்றிகளின் தொல்லை வெகுவாக அதிகரித்து காணப் படுவதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

புன்னாலைக்கட்டுவன்,ஏழாலை,மல்லாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலேயே இப்பன்றிகளின் தொல்லைகள் அதிகரித் திருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அப்பகுதி விவசாய நிலங்களுக்குள் உட் புகும் இப்பன்றிகள் மரக்கறிப் பயிர்களைத் தின்று தீர்ப்பதுடன் நிலங்களையும் கிண்டிக் கிளறிப் பயிர்ச்செய்கையை சேதப்படுத்தி வரு வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னிரவு வேளைகளில் விவசாயிகள் காவல் இருந்து பன்றிகளைத் துரத்தி வந்த தாலும் அவை அதிகாலை மற்றும் நள்ளிரவு வேளைகளில் வந்து இவ்வாறான நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரி விக்கப்படுகிறது. (6-49)

# இலங்கையில் கூகுள் இணையத்தளம் முடக்கப்படும் சாத்தியம்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தேசிய பாதுகாப் புக்கும் எதிரானவை என சில இணையத் தளங்களை இலங்கை அரசு குறிப்பிட்டு வரு கிறது. அந்த தளங்களை இலங்கையில் முடக் குவது குறித்து தகவல் தொடர்பு ஆணையம் துரித நடவடிக்கை எடுக்கவுள்ள தாக செய்தி கள் வந்திருந்தன.

ஆனால் பொதுத் தேர்தல் நடந்து அதன் முடிவு வெளியாகும் வரை இவ்வாறான இணை யங்களை முடக்கும் பணியை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இருப்பினும் இந்த ஆண்டின் ஒரு செய் தித் தளத்தை 2 இலட்சத் திற்கும் மேற்பட்ட பார் வையாளர்கள் பார்த்துள் ளார்கள் என்று நிரூ பித்தால் மட்டுமே அரச தகவல் திணைக் களத் தில் ஊடக அனுமதியை அந்த செய்தித்தளத் துக்கு வழங்கு வதென ஏற்பாடுகள் செய்யப் பட் டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மேலும் இதே போன்ற ஒரு ஒழுங்கு முறையை முன்பே அறிமுகப்படுத்தியிருந்த போதும் அது கடுமையாக பின்பற்றப்படவில் லையென தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்போதைய ஒழுங்கு முறைக ளுக்கு அமையாத செய்தித்தளங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஊடக அனுமதியை இரத்து செய்யும்படி ஊடக திணைக்களத்துக்கு உத் தரவு கிடைத்துள்ளதாகவும் அத்தோடு இலங் கையில் இத் தளங்களைப் பார்வையிட முடி யாது எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் புலனாய்வுப் பிரிவுகளால் கூகிள் தளத்தை கண்காணிக்க முடியவில்லை என்ற காரணத்தால் இலங்கையில் கூகுள் வலை த்தள தேடு பொறியை முடக்கும் எண்ணத்தையும் அரசாங்கம் கொண்டுள்ளது.

இதை நடைமுறைப்படுத்துவதற்கு வேண் டிய தொழில் நுட்ப உதவிகள் சீனாவிடம் இருந்து இலங்கைக்குக் கிடைத்துள்ளன. சீனாவும் கூகுள் தளத்தை தனது நாட்டில் கட்டுப்படுத்தி வைத் திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கூகுள் அமெரிக்க கம்பனி என்பதால் சீனா இதன் மீது நம்பிக்கை இல்லை என்ற தோற்றப் பாட்டை வெளிக்கொண்டு வர முயல்வதாக சொல்லப்படுகிறது. (6)

## பருத்தித்துறை சக்கோட்டை

# புனித பிரான்சிஸ் சவேரியார் புதிய ஆலய திறப்பு விழாவும் மலர் வெளியீடும்

### யாழ். ஆயரின் ஆசிச் செய்தி



பழமை வாய்ந்த அல்வாய் கிராமத்தில் போர்த் துக்கேயர் காலத்தில் இருந்தே கத்தோலிக்க ஆல யமும் மக்களும் இருந்திருக்கின்றனர்.

இதன் அடையாளங்கள் இன்றும் பழைய வேதக் கோவிலடி என்று அழைக்கப்படுகின்றது.

புதிய ஆலயம் கடற்கரைக்கு அண்மையில் கட் டப்பட்டது. காலப்போக்கில் இவ் ஆலயமும் பழுதடைய புதிய ஒரு ஆல யத்தை நிர்மாணிக்கின்ற கட்டாய தேவை இருந்தது. எனவே 2004ஆம் ஆண்டில் அப்போது பங்குத் தந்தையான அருட்திரு பயஸ் இருதயதாஸ் புதிய ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டினார். அதே ஆண்டில் சக்கோட்டை புதிய பங்காக பிரிக்கப்பட்டு அருட்தந்தை ம.பத்திநாதர் பங்குத்தந் தையாக நியமனம் பெற்றார். அவரும் பங்கு மக்களும் ஆலய நிர்மாணப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்ததனால் இன்று கட்டடப்பணிகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது.

கொடிய போரினால் பல வகையிலும் உடைந்துபோய் இருக்கின்ற நம் மக்கள் அனைவரும் தம்மையே புதுப்பித்து குன்றில் இட்ட தீபமாக விசுவாசத் தில் திகழ இறை அருளை வேண்டுகின்றோம்.

இ.தோமஸ் சவுந்தரநாயகம்

### மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச் செய்தி



அல்வாய் ஆழக்கடலின் ஓரத்தில் ஆண்டவன் யேசுவின் ஆடுகளாம் இறைமக்களின் அசையா விசு வாசத்தின் அற்புத கலங்கரை விளக்காய், விடிவெள் ளியாய் அற்புதராம் புனித பிரான்சிஸ் சவேரியாரின் புதிய ஆலயம் பௌர்ணமி நிலவென காட்சி தருவது எனது மறைமாவட்டத்திற்கும் எமக்கும் பெரும் மகிழ்ச் சியைத் தருகின்றது.

புதிய பங்கின் புதிய பங்குத்தந்தை அருட்திரு ம.பத்திநாதர் அடிக ளாரின் ஆர்வத்தின் வேகத்தால் 21.01.2004இல் ஆலய கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நாட்டில் ஏற்பட்ட பல தடங்கல்கள் காரண மாக இப்போது புதிய ஆலய கட்டடமான வேலைகள் அனைத்தும் முடி வடைந்து ஆலயம் புதிய பொலிவுடன் காட்சிதருகின்றது.

புனிதர் பிரான்சிஸ் சவேரியார் இறை விசுவாசத்தின் ஓர் மூலக்கல். ஆண்டவர் இயேசுவின் பணிதனை தன்னுடைய சக்கோட்டை பங்கு மக்க ளும் புனிதரின் விசுவாச வாழ்வின் வழிசென்று இறைவிசுவாசத்தின் வேரூன்றி குடும்பத்திலும், சமூகத்திலும் அமைதியுடன் வாழ உங்களை ஆசித்து நிற்பதோடு புதிய ஆலய கட்டுமானப் பணிகள் அனைத்தும் நிறை வுற அயராது உழைத்த பங்குத் தந்தையர்களையும், பங்கு மக்களையும் வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்



### பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி



வல்லமையுள்ள ஆண்டவரின் செயல்களை எண்ணி மகிழ்கின்றேன். புதிதாக உருவாக்கப்பட்ட சக்கோட்டை பங்கின் முதல் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றது மிக வும் மகிழ்ச்சி.

இப்புதிய பங்கிலே புதிய ஒரு ஆலயத்தை கட்டி நிறைவு செய்தது மிகமிக மகிழ்ச்சி. இவ்வாறான மகிழ்ச் சிகளோடு ஆலயத்திறப்பு விழா நன்னாளிலே ஆண்டவனுடைய ஆசீர்வாதங் களுக்காக நன்றி சொல்கின்றேன்.

புதிய ஒரு ஆலயம் கட்டப்படவேண்டும் என்ற முன்னாள் பருத்தித்துறை பங் குத்தந்தை இருதயதாஸ் அடிகளாரின் எண்ணத்தில் தோன்ற அதற்குரிய வழி களைத் திட்டமிட்டார்.

ஒரு சிறுபகுதி அத்திவாரம் இடப்பட்ட நிலையில் பங்குப் பணிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட எனக்கு இந்த பணியை எவ்வாறு முன்னெடுப்பது என்ற ஏக்கம் இருந்தது.

ஆண்டவரின் அருள் துணையோடும் ஆயரின் ஆலோசனையுடனும் மற்றும் நிதியுதவியுடனும் பங்கு மக்களின் அயராத உழைப்பினாலும் உதவியினா லும் அனைத்து கட்டடப்பணியாளர்களின் ஒத்துழைப்பினாலும் இன்று மகிழ்வை காணுகின்றோம்.

இந்த முயற்சியில் ஆண்டவரின் ஆசீர்வாதம் நிறைவாக இருந்திருக் கின்றது. தொடர்ந்தும் ஆண்டவருடைய ஆசீர்வாதமும் எம் புனிதர் சவேரியா ரின் பரிந்துரையும் நிறைவாக கிடைக்க இந் நன்னாளில் ஆசிக்கின்றேன்.

அருட்திரு.ம.பத்திநாதர்

### பருத்தித்துறை பிரதேச செயலரின் ஆசிச்செய்தி



சக்கோட்டை புனித பிரான்ஸிஸ் சவேரியார் ஆல யத் திறப்பு விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். மிகவும் பழமை வாய்ந்த இவ் ஆலயம் பருத்தித்துறை பங்குடன் இணைந்தி ருந்து புதிய பங்காக 2004ஆம் ஆண்டு உதித்தது.

புதிய பங்கு தந்தை அருட்திரு ம.பத்திநாதர் அடிகளார் அவர்களுடைய சிறப்பான வழி நடத்தலிலும் அதி. வணக்கத்திற்குரிய யாழ். மறைமாவட்ட ஆயர் இ.தோமஸ் சவுந் தராநாயகம் ஆண்டகை அவர்களினதும் பங்கு மக்களினதும் நிதிப்பங்களிப்புடன் அழகு மிகுந்த பேரொளி மிக்க புதிய ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மேன்மை மிக்க இறைப்பணியினையும் சமூகப் பணியினையும் மேற்கொண்டு வரும் பங்குத்தந்தை அவர்களையும் சிறந்த பணிகளுக்கு ஒத்துழைக்கும் பங்கு மக்களையும் மனதார வாழ்த்தி சகல ஜீவராசிகளுக்கும் அன்பும் அமைதியும் சமாதானமும் சௌபாக்கி யங்களும் கிடைக்க இறைவன் ஆசியை வேண்டுகின்றேன்.

இ.வரதீஸ்வரன்

### சக்கோட்டை இந்து ஆலய குருவின் ஆசிச் செய்தி



புனித சவேரியார் ஆலயச் திறப்பு விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடை கின் றேன். மார்க்கங்கள் பலவாக இருந்தாலும் எமக்கெல் லாம் மேற்பட்ட ஓர் சக்தியினால் நாம் அனைவரும் ஆளப்படுகின்றோம் என்பது உண்மை.

அந்த வகையில் எனது அயற்கிராமமான சக்கோட் டையில் உள்ள புனித சவேரியார் ஆலயம் நூறாண்டு காலப்பழமையும் புதுமையுமான வரலாற்றை தன்னகத்தே கொண்டதோர் ஆலயம் என்பதனை நாம் நன்கு அறிவேன்.

1800ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் அல்வாய் பழைய வேதக்கோயி லாக அமைந்த இவ் ஆலயம் பின்னர் 1901ஆம் ஆண்டளவில் கடற் கரையில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாற்றுப்பதிவுகள் கூறுகின்றன. இருப் பினும் பழங்கால கட்டடத்தை புதுப்பித்து மெருகூட்ட வேண்டிய பொறுப்பு இறை அன்பர்களது கடமையாகும்.

*கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்* என்பது ஆன்றோர் வாக்கு கடவுள் வணக்கம் நலமான வாழ்விற்கு இன்றியமையாத ஒன்று.

*இறைவனை தேடும் இதயங்களே வாருங்கள்– நம் இறைவனை யார் என்று சொல்வேன் கேளுங்கள்* என்னும் பாடல் வரி இறைதேடல் உள்ளவர்களுக்கு இந்த ஆலயம் ஒரு பொக்கிசமாகும் என்பதனை மனதிருத்தி எல்லாம் வல்ல சக்கோட்டை விநாயகரை வேண்டி எனது உளமார்ந்த நல்லாசிகளைக் கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ சிவபாலக்குருக்கள்

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இலைமடிச்சுக் கட்டியும் இலை சுருட்டிப் புழுவும்

நெற்பயிரில் அதிகளவில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி பீடைகளுள் இலைமடிச்சுக் கட்டியும் (Leaf Folder) ஒன்றாகும். இலை மடிச்சுக் கட்டிக்கு இணையாக இலை சுருட்டிப் புழு (Leaf roller) இனது தாக்கமும் நெற் பயிரில் இருக்கக் காணப்படுகின்றது. இலை மடிச்சுக் கட்டியையும் இலை சுருட்டிப் புழுவி னையும் ஒன்று என பலர் எண்ணுவதுண்டு. குறிப்பிட்டு கூறக்கூடிய வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் அநேகமான பிரசுரங் களில் இரண்டையும் ஒன்று எனக் கருதப்படு வதை கவனத்தில் கொள்ளவும். இவ்விரண் டினதும் நிறைவுடலியில் வேறுபாடுகள் உண்டு. நெற்பயிரில் ஏற்படுத்தும் சேதத் திலும் இவ் வேறுபாடுகளைக் காணமுடிந் தாலும் இரண்டும் இலையை வெட்டி உண்டு சேதத்தை ஏற்படுத்துவதில் ஒத்துப்போ கின்றன.

**விஞ்ஞான ரீதியில்...**

இரண்டும் அந்துப்பூச்சி வகையைச் சார்ந்தன. லெப்பிடொப்தீரா வருணத்தைச் சார்ந்தவை. இவற்றுக்கு தனித்தனியாக பெயர்களுண்டு. இலைமடிச்சுக்கட்டிக்கு நபலோகுரோகிசு மெடினாலிசு(naphaloc rocis Medinalis) எனவும் இலை சுருட்டிப் புழுவிற்கு மெரஸ்மியா பட்னாலிசு எனவும் பெயருண்டு. இப்பெயர்கள் மாறிப் பயன் படுத்தப்படுவதுண்டு. எது எப்படியிருந்தாலும் இரண்டினைப் பற்றியும் விளக்க முற்படு கிறேன். இரண்டிலும் புழுப்பருவமுமே சேதத்தை உண்டு பண்ணும் பருவநிலை களாகும்.

இப்பூச்சிப் பீடைகள் நெற்பயிரின் இலைப்பரப்பை மடித்துக் கட்டி அல்லது சுருட்டி சேதத்தை ஏற்படுத்தும். புழுக்கள் இலையின் விளிம்பை நேர்ப்பக்கமாகவோ அல்லது குறுக்காகவோ மடித்து தனது உமிழ் நீர் சுரப்பினால் சேர்த்து துணி தைப்பது போல தைத்து விட்டு உள்ளுக்குள்ளே பாதுகாப்பாக இருந்து இலை மேற்பரப்பை பச்சையு ருமணிகளுடன் சேர்த்து உண்ணு கின்றன.

புழுப்பருவங்களில் வெட்டியுண் ணும் பருவங்களே இலகுவில் அழிக்கக் கூடியன வாகும்.





இலை மடிச்சுக் கட்டி
நபலோகுரோகிசு மெடினாலிசு

இலை சுருட்டி
மராஸ்மியா பட்னாலிசு

இதன் காரணமாக வெளிச் சப் பொறியை வயலில் வைப் பதன் மூலம் நிறைவுடலிகளான அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக் கலாம். வெளிச்சப் பொறிக்காக ஏதேனும் ஒரு விளக்கும் அதன் கீழே தட்டில் அல்லது கொள்கலனில் மண்ணெண்ணெய் கலந்து நீர் என்பவற்றை வைத் தாலே போதுமானது. கணிசமான நிறைவுட லிகளை கவர்ந்து அழிப்பதன் மூலமாக இப் பீடைகளின் எண்ணிக்கையைக் குறைத்து விடலாம்.

மாறாக சேதத்தை ஏற்படுத்தும் பருவ நிலையான புழு பருவத்தினை அழிப்பது சிரமமான காரியமாகும். இப்புழுக்கள் முட்டை பொரித்தவுடன் மெல்ல மெல்ல நகர்ந்து

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இலையின் உள் பக்கம் வந்து இலையின் விளிம்புகளைப் பிடித்து இழுத்து ஒன்றுடன் ஒன்றை தனது வாயுறுப்பின் கீழ்ப்பக்க முள்ள உமிழ் நீர் சுரப்பின் மூலம் ஒட்டவைத் துவிடும். ஒட்டும் வடிவம் கூட பெரிய நூலோடி தையல் போல அமை ந்து விடுகின்றது. தைத்த பின்பு புழுவானது இலை மடிப்பினுள் அல்லது இலைச்சுருளினுள் இருந்து உட்பக்கமாக வெட்டி யுண்ணும் வாயுறுப்பினால் பச்சைய பகுதியை உண் ணும். இதன் காரணமாக உண்ணப் பட்ட பகுதி பச்சை நிறத் தை இழந்து வெள்ளை யாக இருக் கும். இளம் இலைகளிலே இப் புழு வின் சேதம் அதிகமாக இருப்பினும் இலை முற் றும் போது பூச்சியினாலேற்பட்ட சேதம் வடிவாகத் தெரியும். வரம்பினருகேயுள்ள நெற் பயிர்களில் சேதம் அதிகமாக தெரிவதுடன் நெல் நெருக் கமாக இருக்கும் போது இப்பூச்சியின் தாக்கம் அதிகமாக இருக்கும். இலையை மடித்தோ சுருட்டியோ அதனுள் இருப்பதனால் இப்புழு வாயுறுப்பு இருப்பதால் இலைப் பரப்பை சுரண்டி உண்ணும். இதனால் உண்ணப் பட்ட இலைப்பரப்பு வெள்ளை நிறமாக இருக்கும்.





இலை சுருட்டிப் புழுவின் தாக்கம்

இலைசுருட்டிப்புழு பெயருக்கேற்ப இலையைச் சுருட்டி அதனுள்ளே இருந்து இலைப்பரப்பை உண்ணும். அந்துப் பூச்சி இடும் முட்டை பொரித்து வெளிவரும் புழுக்கள் இலைப்பரப்பில் இலையை மடித்து அதனுள் உள்ள இலைப்பரப்பை சுரண்டிஉண்டு அத னுள் ளேயே கூட்டுப்புழுவாகிவிடும்.

கூட்டுப்புழுவில் இருந்து வெளிவரும் நிறைவுடலிஅந்து பின்பு இனம்பெருக் கும். நிறைவுடலியோ முட்டை மற்றும் கூட்டுப்புழுவோ சேதத்தை ஏற்படுத் தாததனால் புழுப்பருவத்தை கட்டுப்ப டுத்த வேண்டும்.

இப் பூச்சி பீடையை முகாமைத்துவப் படுத்துவதற்கான வழிகளைத் தொடர்ந் து ஆராய்வோம். இலை மடித்துக் கட்டி அல்லது இலை சுருட்டிப் புழுவின் வாழ் க்கை வட்டத்தை சுருங்கப் பார்த்தால் முட்டை → புழு → கூட்டுப்புழு → நிறை வுடலி (அந்து பூச்சி) என நான்கு பருவ நிலைகளுள் அமைந்திருக்கும். பொது வாக அசை யும் அல்லது உணவு உண் பருவத்தை ஒட்டுண்ணிகளோ இரைகௌவி களோ தாக்குவது கடினம். சேதம் அதிகமாக காணப்பட்டால் பைப்பரோனில் 50 கி/ லீற்ற ருக்கு குளோர்பைரிபொஸ் 200 கி/லீற்ற ருக்கு அல்லது அசடிரக்ரின் 10 கிராம் /லீற்ற ருக்கு ஆகிய பூச்சி நாசினிகளை தெளித்து இப் பூச்சி பீடையை கட்டுப்படுத்தலாம்.

இலை மடிச்சுக்கட்டியினாலான சேதம் அதிகரித்தால் பயிரின் விளைச்சல் பாதிப் படையும்.

ஆதலால் நெல்வயலை அடிக்கடி அவதானித்து பீடைப் பெருக்கத்தை கண்டு பிடித்து விரைந்து பரிகாரம் கண்டிடவேண்டும்.





இலை மடிச்சுக்கட்டியின் சேதம்

(தொடரும்)

## தேர்தலில் போட்டியிடுவதற்காக ஹிஸ்புல்லா இராஜினாமா

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையின் அமைச் சரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவ தற்காக தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள தேர்தலில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட ணியில் இணைந்து போட்டியிடவுள்ளதாகக் கூறும் ஹிஸ்புல்லா அந்தக் கட்சியின் சார் பில் தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டி யிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாண சபையின் வேறு சில உறுப்பினர்களும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது பதவி களை இராஜினாமா செய்யவுள்ளதாக அங் கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. (6)

## கைதுசெய்யப்பட்ட 16 மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கை

இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவேளை கைது செய்யப்பட்ட 16 இலங்கை மீனவர்களையும் விடுதலை செய் யுமாறு மீனவர்களின் உறவினர்கள் கோரிக் கை விடுத்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி சிலாபத்திலிருந்து 4 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது சில ருக்கு 4 வருட சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது.

ஆனால் ஏனைய மீனவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகி றது.

இதேவேளை இம் மீனவர்களை விடுத லை செய்வதற்கான பேச்சுவார்த்தை இடம் பெற்று வருவதாகவும் அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள் ளது. (6-9)

## பாகிஸ்தானில் பனிச்சரிவில் சிக்கி 36 பேர் பலி

பாகிஸ்தானில் வட மேற்கு எல்லைப் புற மாநிலத்தில் உள்ள மலைப்பகுதியில் 6 அடி உயரத்திற்கு பனிப்பொழிவு ஏற்பட்டது.

இதன் காரணமாக பனிச்சரிவு ஏற்பட்டதில் வீடுகள் பனிக்கட்டிகளுக்குள் புதைந்தன. இதன் காரணமாக 36 பேர் பலியானார்கள். அவர்களில் 19 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைகளில் சேர்க்கவும் வீதிகளில் உறைந்துள்ள பனிக்கட்டிகளை அகற்றவும் இயந்திரங்களையும் ஹெலிகொப்டர்களையும் அனுப்பும் படி மாநில அரசு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஆனால் நிலச்சரிவு காரணமாக வீதிகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் இயந்திரங்களை அனுப்ப முடியவில்லை என்று அதிகாரிகள் கூறினார்கள். (6)

## சுற்றுச்சூழல் சீர்கேட்டை தடுக்க வாடகை சைக்கிள்

சுற்றுச்சூழல் சீர்கேட்டை தடுப்பதற்காக வாடகை சைக்கிள் திட்டத்தை மெக்சிகோ சிட்டியில் அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

உலகிலேயே சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ள மாநகரங்களில் மெக்சிகோ சிட்டியும் ஒன்று. தலைநகராக விளங்கும் அந்நகரில் 1.9 கோடி பேர் வசிக்கின்றனர். 50 இலட்சம் வாகனங்கள் அங்கு புழங்குவதால் காற்று அதிக அளவில் மாசடைந்துள்ளது.

அந்நாட்டின் மொத்த காபனீரொட்சைட் வெளியேற்றத்தில் 9.1 சதவீத பங்கு வகிக்கிறது. எனினும் அரசின் பல்வேறு முயற்சி காரணமாக 1990களில் இருந்ததை விட இப்போது நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் சீர்கேட்டை குறைப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக எகோபைசை என்ற பெயரில் வாடகை சைக்கிள் திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் வீதிகளில் கார்களின் எண்ணிக்கை குறைந்து காற்று மாசடைவது குறையும் என்று அரசு கருதுகிறது.

முதல் கட்டமாக நகரின் 85 இடங்களில் 1114 சைக்கிள்கள் வாடகைக்குக்கிடைக்கும் ஆண்டுக்கட்டணமாக ரூ.1100 செலுத்துபவர்களுக்கு இலத்திரனியல் அட்டை வழங்கப்படும் உறுப்பினர்களுக்கு தினமும் 30 நிமிடம் சைக்கிள் வழங்கப்படும். அதற்கு மேல் பயன்படுத்துபவர்கள் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும் என்று நகர மேஜர் மார்சிலோ எப்கார்டு தெரிவித்துள்ளார். (6)

# சீனாவின் கடும் எதிர்ப்பைத் தாண்டி தலாய்லாமாவுடன் ஒபாமா சந்திப்பு





(வோஷிங்டன்)

திபெத் பிரச்சினையில் அமெரிக்கா உதவ வேண்டும் என்ற கோரிக்கையுடன் புத்தமதத் தலைவர் தலாய்லாமா அமெரிக்கா அதிபர் ஒபாமாவை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இச்சந்திப்புக்கு சீனா கடும் எதிர்ப்பைத் தெரிவித்தும் அதைப் புறக்கணித்துவிட்டு தலாய்லாமாவை அதிபர் சந்திப்பது உலக அரசியல் அரங்கில் பல்வேறு ஊகங்களை எழுப்பியுள்ளது.

திபெத் நாட்டின் அரசியல் தலைவரும் உலகம் முழுவதிலுமுள்ள புத்தமதத்தவரின் தலைவருமான தலாய்லாமா அமெரிக்கா அதிபரைச் சந்திப்பது வாடிக்கையானது என்றாலும் அதனால் சீன- அமெரிக்கா உறவு சிக்கலாகாமல் தொடரும் வகையில் சில நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தலாய்லாமாவின் சிறப்புத் தூதர் லோதி கியாரி இது குறித்து கூறுகையில்,

திபெத் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு அதிபரின் உதவியைக் கேட்க இருக்கிறார். அந்தப் பிரச்சினை தீர்க்கப்படுமானால் திபெத் மற்றும் சீன மக்களுக்கு சாதகமான நல்ல பலன்களைத் தரும் என்று தெரிவித்தார்.

ஜனநாயகக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் மனித உரிமைகளுக்காகப் போராடி வருவதற்காகவும் தலாய்லாமா விருது கொடுத்து கௌவிரக்கப்படவுள்ளதாக தெரிகிறது.

வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் இது குறித்து கூறியதாவது,

சீனாவுடனான அமெரிக்க உறவில் பல்வேறு மாறுபட்ட நிலைகள் இருந்தாலும் அது ஒரு முதிர்ச்சியான உறவு என்ற நிலையில் தான் தொடர்கிறது. அவர்களோடு நாங்கள் ஒத்துப் போகும் இடங்களும் வேறுபடும் இடங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அதனால் இந்த உறவு ஒரு சிக்கலான உறவாகவும் இருக்கிறது.

இரு தரப்பு உறவையும் தொடர்ந்து பராமரிக்கவே விரும்புகிறோம் .ஆனால் அதே நேரத்தில் கலாசாரம் மற்றும் மதத் தலைவர் என்ற முறையில் தலாய்லாமாவுக்கான மரியாதையும் கொடுக்க விரும்புகிறோம் என்று ரொபர்ட் கிப்ஸ் தெரிவித்தார்.

மேலும் ஒபாமா -லாமா சந்திப்புக்கு சீனா தனது எதிர்ப்பைக் கடுமையாக தெரிவித்தது. தலாய்லாமா ஒரு பிரிவினைவாதி என்று குற்றம் சாட்டி வரும் சீனா ஒபாமா அவரைச் சந்தித்தால் இரு தரப்பு உறவுகளும் சீர்கெடும். இரு தரப்பின் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பில் விரிசல் ஏற்படும் என்று எச்சரித்திருந்தது.

பல்வேறு சூழல்களால் சீனாவைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயத்தால் அந்நாட்டைச் சமாதானப்படுத்த இந்தச் சந்திப்பின் போது தலாய்லாமாவுடன் அதிபர் ஒபாமா சேர்ந்து பத்திரிகைகளுக்கு போட்டோ தருவதும் பேட்டியும் இருக்காது என்றும் கூறப்படுகிறது.

வழக்கமாக அமெரிக்க அதிபர்கள் பிற நாடுகளின் அரசியல் தலைவர்களை ஓவல் ஆபீஸ் என்ற இடத்தில் சந்திப்பது வழக்கம்.

ஆனால் தலாய்லாமாவை அதிபர் தனது மாளிகையில் உள்ள மேப் ரூம் என்ற இடத்தில் சந்தித்துள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன. இது லாமாவை அரசியல் தலைவராக அமெரிக்கா கருதவில்லை என்று சீனாவுக்கு தெரிவிக்கும் ஏற்பாடாக இருக்கலாம் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை தலாய்லாமா பிறந்த வட மேற்கு சீனாவிலுள்ள கின்காய் என்ற பகுதியில் உள்ள திபெத்தியர்கள் இந்த சந்திப் பைத் தங்கள் தலைவருக்கு கிடைத்த வெற்றியாகக் கருதி வெடிவெடித்துக் கொண்டாடினார். (6)

# பாகிஸ்தான் மசூதியில் தற்கொலைத் தாக்குதல்

## 30 பேர் உடல் சிதறிப் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மசூதியில் தற்கொலைப் படை பயங்கரவாதி நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 30 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கே கைபர் மலைப் பகுதியில் உள்ள மசூதியில் கடந்த வியாழக் கிழமை இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

லஷ்கர் - இ-இஸ்லாம் பயங்கரவாத அமைப்பின் தளபதி ஆசம் கானும் அவரது பாதுகாவலர்கள் சிலரும் இந்த மசூதிக்கு தொழுகை நடத்த வந்தனர் எனவும் இவர்களின் எதிரியான அன்சார் -உல்- இஸ்லாம் பயங்கரவாதிகள், ஆசம் கானைக் கொல்வதற்காக இந்த கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழுகை நடந்த போது ஏராளமான பொது மக்கள் மசூதியில் இருந்ததாகவும் அப்போது தொழுகையில் கலந்துகொள்வது போல வந்த தற்கொலைப் படை பயங்கரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதில் பயங்கரவாத இயக்க தளபதி ஆசம் கான் அவருடைய பாதுகாவலர்கள் 6பேர் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்.

மசூதி முழுவதும் மனித உடல் உறுப்புகள் சிதறி அந்த இடம் முழுவதும் இரத்தக் காடாக காட்சியளித்தது என்று பாகிஸ்தானில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (6)




# கருவில் இருக்கும் போதே இரு மொழிகளை அறிய முடியும்

(வோஷிங்டன்)

பிரிட்டிஸ் கொலம்பியா பல்கலைக்கழக உளவியல் விஞ்ஞானிகள் பிரான்ஸ் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பின் ஆராய்ச்சியாளர் ஆகியோர் இணைந்து கருவிலிருக்கும் குழந்தைகளின் மொழித் திறன் பற்றி விரிவான ஆராய்ச்சி நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளனர். அதில் கூறியிருப்பதாவது,

தாயின் பேச்சு மொழியை கருவில் இருக்கும் குழந்தை கேட்டறியும் திறன் கண்காணிக்கப்பட்டு குழந்தை பிறந்ததும் பரிசோதிக்கப்பட்டது. அதற்காக 2 பிரிவாக கர்ப்பிணிகள் தேர்வு செய்யப்பட்டனர். ஒரு பிரிவினர் வெறும் ஆங்கிலம் மட்டுமே பேச கேட்டுக்கொள்ளப்பட்டனர். மற்றொரு பிரிவினர் ஆங்கிலத்துடன் வேறு மொழி பேச வைக்கப்பட்டனர்.

முதல் கட்ட சோதனையில் இரண்டு பிரிவு கர்ப்பிணிகளும் 10 நிமிடங்களுக்கு ஆங்கிலம் வேறு ஒரு மொழியை மாறி மாறி பேச வைக் கப்பட்டு குழந்தையின் கேட்டறியும் திறன் பரிசோதிக்கப்பட்டது. ஆங்கிலம் மட்டும் பேசி வந்த கர்ப்பிணிகளின் கருவில் இருந்த குழந்தை அந்த மொழியில் ஆர்வம் காட்டியது.

இரண்டு மொழிகளை கேட்டு வந்த குழந்தை ஆங்கிலம் மற்றும் வேறு மொழி இரண்டுக்கும் சமமான ஆர்வத்தை காட்டியது. அதன்மூலம் இரு மொழி பேசும் பெற்றோரின் குழந்தைகள் அதற்கேற்ப கருவிலேயே தயாராவது உறுதியானது.

இவ்வாறு ஆராய்ச்சி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மகாவிஷ்ணுவின் பெருமைகளை நாரதர் கூறும் போது தாயின் வயிற்றில் கருவாக இருந்த பிரகலாதன் கேட்டு பிறகு பூமியில் பிறந்ததும் பக்த பிரகலாதன் ஆனான். இதைப் போல் சுபத்திரையின் வயிற்றில் அபிமன்யூ இருந்த போது சக்ரவியூகம் குறித்து கிருஷ்ணர் கூறினார்.

வியூகத்தை தகர்த்து உள்ளே செல்வது பற்றி கிருஷ்ணர் கூறியதை கேட்ட சுபத்திரை அதிலிருந்து வெளியே வருவதை பற்றி கூறிய போது தூங்கி விட்டாள் .கிருஷ்ணர் கூறியதை கருவில் இருந்து கேட்ட அபிமன்யூ சிறிய வயதிலே போர் தந்திரங்களில் தேர்ச்சி பெற்றதுடன் சக்ர வியூகத்தை தகர்ப்பது பற்றி கூறும் போது தாய் தூங்கியதால் பாரத போரில் அதே வியூகத்தில் பலியானான்.

கருவில் இருக்கும் குழந்தையின் கேட்டறியும் திறன் பற்றிய இப்போதைய ஆராய்ச்சியுடன் இந்தப் புராணக் கதைகள் பொருந்துவது குறிப்பிடத்தக்கது. (6)

# கலிபோர்னியாவில் இடம்பெற்ற விமான விபத்தில் மூவர் பலி

கலிபோர்னியாவில் சிறிய ரக விமானமொன்று விபத்துக்கு உள்ளானதில் விமானத்தில் பயணித்த மூன்று பேரும் உயிரிழந்துள்ளனர்.

குறித்த சிறிய ரக விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் வீடுகளின் மீது வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

செஸ்னா 310 ரக விமானம் ஒன்றே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என அமெரிக்கா விமான போக்குவரத்துத்துறை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் மின்சாரக் கேபிள்களில் மோதி விமானம் விபத்துக்கு உள்ளானதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

விமானம் வீடுகளின் மீது வீழ்ந்த போதிலும் வீடுகளில் இருந்தவர்களுக்கோ அயலவர்களுக்கோ எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

டஸ்லா மோட்டாஸ் என்ற இலத்திரனியல் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்களே இவ்வாறு சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்த விமான விபத்தைத் தொடர்ந்து பிரதேசத்தின் பல இடங்களில் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (6)

தனக்கொன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் அறிந்தவன் போல் நடிப்பவன்தான் அரசியல்வாதி ~ பேர்னாட்ஷா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆசை கொண்ட ஆன்மாவிற்கு 'தேர்தல் தானம்' கொடுக்கும் புரோகிதம்

அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்கள் ஏமாற்றப்படும் நிகழ்வு தொடர்கதையாகி வருகின்றது.

அகிம்சை வழி தொடக்கம் ஆயுத போராட்டம் வரை நடத்தி முடிந்தாகிவிட்டது. எதுவுமே விடிவைத்தரவில்லை.

மாறாக உள்ளதையும் பறிகொடுத்து, உறவுகளையும் இழந்து மீளவும் பூச்சியத்தில் இருந்து தொடங்கும் பாவத்திற்கு தமிழ் மக்கள் ஆளாகியுள்ளனர்.

இந்தப் பாவவினைக்கான காரணம் என்ன என்பது குறித்து ஆராயவேண்டிய தேவை இருந்தாலும், அதுபற்றி எல்லாம் நாம் அலட்டிக் கொள்ளும் கலாசாரத்திற்குள் உட்படாதவர்கள் என்பதால் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

இருந்தும் தமிழ் மக்கள் எல்லாவற்றையும் இழந்து மனம் பேதலித்து வாழும் நிலைக்கு எங்கள் அரசியல் தலைமைகள் மூலகாரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

விசுவாசமற்ற அரசியல் தலைமைகள்–பதவி ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட சுயநலம்–தத்தம் குடும்பங்களை வசதிபடைத்த நாடுகளில் சௌகரியமாக இருத்திவிட்டு இடையிடையே இலங்கைக்கு விஜயம் செய்யும் உள்ளக இன்பநிலை.

இவையே எங்களினம் அனுபவிக்கும் கொடுந்துயருக்குக் காரணம் எனலாம்.

சரியான அரசியல் தலைமைகள் இல்லாமையால் அல்லல்படும் எங்கள் இனம் மீட்சி பெற வேண்டுமாயின் தன்னலமற்ற அரசியல் தலைமை உருவாக வேண்டும்.

எனினும் இதற்கான களநிலை உண்டாயெனில் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பில் பலரும் போட்டியிட உள்ளதான செய்தி நாம் எங்கே இருக்கின்றோம் என்பதை கோடிகாட்டுகின்றது.

நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் பலருக்கு நீண்ட கால ஆசை தீர்க்கும் அல்வா போல உள்ளது.

இன்னும் சிலருக்கு அவஸ்தைப்படும் ஆத்மாவிற்கு தானம் கொடுக்கும் புரோகிதமாக அமைகின்றது.

இவர்களுக்கு அல்லல்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கும் தமிழ் மக்களின் துயரம் தெரியாது; இழப்புத் தெரியாது.

துப்பாக்கிகள் ஓய்வு பெற்று விட்டன என்பதற்காக தேர்தலில் போட்டியிடும் புதுமையை எங்கள் ஈழத்தமிழ் மண்ணிலன்றி வேறு எங்கும் காணமுடியாது.

## சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் பிரதேச செயலக மட்டத்திலுள்ள நிறுவனங்களை மறுசீரமைக்க திட்டம்

(கொழும்பு)

சிறுவர் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பிரதேச செயலக மட்டத்தில் உள்ள நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் படுகின்றமை மற்றும் துன்புறுத்தப் படுகின்றமை தொடர்பாக அண்மைக்காலமாக அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

மேலும் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கி கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ள சிறுவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இதற்கான விசேட திட்டமொன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் இத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ளஅதிகாரிகளுடன் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வடபகுதியில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மாணவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் கண்டறிந்து அதற்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

## சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை குறைத்து மதிப்பிட முடியாது

### எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஒரு வகையில் அப்பாவி என்றே கருதப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுநுவர தேர்தல் தொகுதி அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மூவாயிரம் மக்கள் குழுமி அவரது கரங்களைப் பற்றிக் கொண்டபோது, தேர்தலை வெற்றிகொள்ள முடியும் என பொன்சேகா தப்புக் கணக்கு போட்டுவிட்டதாக எஸ்.பி. குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் தொடர்பில் தமக்கு சிறந்த அனுபவம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் காலத்தில் தம்மைச் சுற்றி 600 பேர் இருந்ததாகவும் தேர்தல் முடிந்து வீடு திரும்பிய போது 422 பேர் மட்டுமே எஞ்சியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேர்தல் காலங்களில் தம்மைச் சுற்றி குழுமுவோரின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் வெற்றி குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ளக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு வாக்காளர்களை கேவலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதெனவும் கணனி மோசடி குறித்து ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம் செய்து வந்த போதிலும் அவ்வாறான எந்தவொரு முறைப்பாடும் ஜனாதிபதித் தேர்தல் குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்படவில்லை எனவும் இந்த விடயங்களை மாநாயக்கத் தேரர்கள் மிகவும் உன்னிப்பாக அவதானிக் வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சோகவின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை குறைத்து மதிப்பிட முடியாது என குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் தமக்கு ஏற்பட்ட நிலைமையே இன்று ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (4-6)

## ஏ-9 வீதியூடாக பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பு

### இ.போ.ச.தகவல்

(கொழும்பு)

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணம் பயணிப்பவர்களின் எண்ணிக்கை இவ்வருடம் மேலும் அதிகரிப்பதுடன் அதன் ஊடான வருமானமும் அதிகரிக்கலாம் என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

தற்போது ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கும் -கொழும்புக்கும் இடையில் நாளாந்தம் 600 பேர் பயணிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பயனை தற்போது அரசாங்கம் அனுபவிப்பதாக போக்குவரத்துத் துறை அமைச்சா டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் மேலும் பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை போக்குவரத்துச்சபையினால் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையில் 10 பஸ்சேவைகள் நடத்தப்படுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணத்திற்கும் கண்டிக்கும் இடையில் நான்கு பஸ்களும் யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையில் 2 பஸ்களும் மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 2 பஸ்சேவைகளும் நடத்தப்படுகின்றன.

இந்நிலையில் ஏ-9 வீதியூடான போக்குவரத்துச் சேவைகள் போலவே ஏ-35 மற்றும் ஏ-34 வீதிகளில் ஊடாகவும் பஸ்சேவைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

## ஜே.வி.பியின் தலைமையகம் சோதனையிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகம் நேற்று சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் குழுவொன்று, தனது தலைமையகத்திற்கு வந்து அலுவலகத்தை சோதனையிட கோரியபோதும் நீதிமன்ற உத்தரவில்லாத காரணத்தினால் தமது உறுப்பினர்கள் அதனை அனுமதிக்க வில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து திரும்பிச் சென்ற பொலிஸார் நீதிமன்ற உத்தரவுடன் வந்து தமது தலைமையகத்தை சோதனையிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்திற்கு எதிரான சுவரொட்டிகள் இருந்ததாகக் கூறியே இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது எனவும் அவ்வாறான சுவரொட்டிகள் மீட்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (4-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



புனிதமான வாழ்க்கையின் விளைவாக உற்சாகத்தில் எழுச்சி அடைந்தவர்கள்; கடவுளிடம் அழியாத நம்பிக்கை என்பதை அரணாகப் பெற்றவர்கள், ஏழை எளியவர்களிடமும் தாழ்ந்தவர்களிடமும் ஒடுக்கப்பட்டவர்களிடமும் கொண்ட இரக்கம் காரணமாகச் சிங்கத்தைப் போன்ற தைரியம் அடைந்தவர்கள் இத்தகைய ஆண்களும் பெண்களும் நூறாயிரம் பேர் வேண்டும்.

இவர்கள் மோட்சம், பரோபகாரம், தாழ்ந்தவர்களின் முன்னேற்றம், சமூக சமத்துவம் ஆகிய இந்த உயர்ந்த கொள்கைகளைப் பிரசாரம் செய்தபடி இந்த நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரை செல்வார்கள்.








யாழ். மாவட்டப் பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலக இசை மன்றங்களுக்கான இசைக்கருவிகள் வழங்கும் நிகழ்வும் நேற்று வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் உரையாற்றுவதையும் வடமாகாண ஆளுநர் வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை அதிபரிடம் நூல்களை கையளிப்பதையும் மற்றும் வடமாகாண பிரதேச செயலகங்களில் இசை மன்றங்களுக்கு இசைக்கருவிகள் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் : நம்சன்

## ஹெரோயின் விற்றவருக்கு 5 ஆண்டு கடூழியச்சிறை

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட வத்தளை ஹுனபிட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று 5 ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

அத்துடன் 15 ஆயிரம் ரூபா அபாராதத்தைச் செலுத்துமாறும் குறித்த நபருக்கு நீர்கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஷிரான குணரத்ன உத்தரவிட்டார்.

ஏற்கனவே ஹெரொயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றத்திற் காக ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் இச் சந்தேகநபர் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (6)

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



ஸ்ரீ பகவானின் 61ஆவது ஜென்ம தினவிழா

திகதி: 07.03.2010 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்:- திரு. வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர லட்சுமி நாராயண மண்டபம் (பெருமாள் கோவில்)
நேரம்: 9.00 மணி

61 சங்கு திரவியங்களுடன் பாத பூஜையும்,61 சிட்டி தீப பூஜையும், 61 திரவியங்கள் (பிரசாதம், பழ வகைகள் உட்பட) மற்றும் 108 திருவிளக்கு பூஜையும் நடைபெறவுள்ளது.

விசேடமாக அம்மா பகவானின் ஸ்ரீ மூர்த்தி ஊஞ்சல் பூஜையும், ஊஞ்சல் பாடல்களுடன் நடைபெறும். இப் பூஜைகள் அனைத்தும் முதல் முறையாக நடைபெறவுள்ளது. இதில் பக்தர்கள் கலந்து கொண்டு அம்மா பகவானின் அருள் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

108 திருவிளக்கு பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்கள் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலும் நல்லூர் முருகன் சன சமூக நிலையத்திலும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

T.P.: 021 222 2935
071 8265727

ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,
யாழ். தலைமை அலுவலகம்;
மணியர் பதிலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(அ-4472)

# அரசியல் தீர்மானங்களை எடுக்கின்ற சபைகளில் பெண்களுக்கு அதிகம் இடம் ஒதுக்கப்படவேண்டும்

## மக்கள் உரிமைகள் கட்சியின் ஸ்தாபகர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சனத்தொகையில் 52 வீதமும் வாக்காளர்களில் 56 வீதமும் பெண்களே . ஆயினும் இந்த நாட்டில் அரசியல் தீர்மானங்களை எடுக்கின்ற சபைகளில் எமக்கு மிகவும் குறைவான இடமே ஒதுக்கப்பட்டுள்ளது என மக்கள் ஒருமைகள் கட்சியின் ஸ்தாபகரும் பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பின் உறுப்பினருமான சாந்தி சச்சிதானந்தம் தெரிவித்தார்.

சகல கட்சிகளும் பெண்களுக்கான வாய்ப்புக்களை அதிக மாக வழங்கி எமது பிரதிநிதித்து வத்தை உள்ளூராட்சி , மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றத் திலும் அதிகரிக்க வேண்டும் என்ப தோடு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மாவட்ட ரீதியாக குறைந்த பட்சம் இரண்டு வேட்பாளர்களையாவது நிறுத்த வேண்டும் என வும் கேட்டுக்கொண்டார்.

நேற்று முன் தினம் ரேணுகா ஹோட்டல் கேட் போர் கூடத் தில் இடம்பெற்ற செய்தியாளர்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ் வாறு கூறி னார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் ,

இன்று சகல துறைகளிலும் பெண்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். தமக்கு வழங்கப்பட்ட பணிகளை சிறப்பாக முன்னெடுக்கின்றார்கள்.

எனவே அரசியலிலும் அவர்க ளால் சிறப்பாக செயற்பட சிந்திக்க முடியும். அதற்காக வாய்ப்புக்களை வழங்க வேண்டும் வன்முறைகள் அற்ற புதியதோர் அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நாட்டில் ஏற்படுத்துவதற்கும் வேறுவாய்பாக அமையும்.

இன்று எந்த ஒன்றுகூடலின் போது சகல கட்சிகளும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண்கள் ஒரே மேடையில் ஒன்றாக இணைந்துள்ளோம். இவ்வாறானதொரு புதிய அரசியல் கலாசாரம் உருவாக வேண்டும். இன்று பெண்கள் உள்ளூராட்சி சபைகளில் இரண்டு வீதமான உறுப்பினர்களையும் மாகாண சபையில் ஐந்து வீதமான உறுப்பினர்களையும், நாடாளுமன்றத்தில் ஆறு வீதமான உறுப்பினர்களாகவுமே அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நிலை மாறி இன்னும் அதிகமான பெண்கள் இவற்றுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். அதற்கு சகல கட்சிகளும் வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

கல்வி , கலை , கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் பிரபல்யமானவர்களும் சிறந்த அரசியல் ஆளுமை மிக்கவர்களும் கட்சிக்காக பாடுபடும் தொண்டர்களுமாக ஏராளமான பெண்கள் சமூகத்தில் இருக்கின்றார்கள். இவர்களுக்கான அரசியல் வாய்ப்புக்கள் போதுமானதாக இல்லை. தேசிய பட்டியல் மூலம் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போது கூட பெண்களுக்கான இட ஒதுக்கீடு சரியாக வழங்கப்படுவதில்லை. இதனையே வலியுறுத்துகின்றோம்.

உலகின் முதலாவது பெண் பிரதமரை நியமித்த பெருமைக்குரிய நாடு எமது நாடு. இருந்த போதிலும் சுதந்திரமடைந்த காலம் தொட்டு இன்றுவரை நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 10 வீதத்தையேனும் எட்டவில்லை என்பது மிகவும் கவலையளிக்கின்றது.

ஜனநாயகத்தைப் பற்றியும் சமாதானத்தைப் பற்றியும் பேசும் நாம் அதனைச் செயற்பாட்டில் காட்ட வேண்டும் அப்படி என்றால் ஒவ்வொரு கட்சியும் தமது கட்சியில் பெண்களுக்கான ஒதுக்கீடுகளை அதிகரிக்க வேண்டும். அவ்வாறான செயற்பாடுகளாலேயே உண்மையான ஜனநாயகத்தையும் சமதானத்தையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியும் .

வீட்டு வேலைகளையும் , தமது பிள்ளைகளையும் சிறப்பாக பராமரித்து நிர்வகிக்கும் பெண்களுக்கும் கிராமப்புறங்களில் தலைமைத்துவங்களை ஏற்று அவற்றை சிறப்பாக முன்னெடுக்கும் பெண்களுக்கும் மற்றும் பல்வேறு துறைகளில் தம்மை ஈடுபடுத்தி நாட்டுக்கு அதிக வருமானத்தைக் பெற்றுக் கொடுக்க பெண்களுக்கும் ஏன் அரசியலில் சிறப்பாக செயற்பட முடியாது?

எனவே உள்ளூராட்சி சபைகளிலும் மாகாண சபைகளிலும் மற்றும் நாடாளு மன்றத்திலும் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் சகல கட்சிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (6)

# யாழ். பெண்கள் கூடைபந்தாட்டத் தொடர்; திருக்குடும்பக் கன்னியர்மடம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரமைய றோட்டரக் கழகம் எக்ஸ்போ எயார் விமான சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கூடைபந்தாட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை சம்பியனானது.

இச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை, உடுவில் மகளிர் கல்லூரி அணியை சந்தித்தது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் ஆரம்பம் முதலே யாழ். திருக்குடும்பம் கன்னியர் மடம் பாடசாலை அணி இடைவேளையின் போது 25:8 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.



எனினும் இடைவேளைக்குப்பின் உடுவில் மகளிர் கல்லூரி அணி வீராங்கனைகள் போராடிய போதும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை அணி 52:39 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரில் சம்பியனானது.

# முதலாவது 'இருபது-20' போட்டியில் இங்கிலாந்து அணி அபார வெற்றி

(டுபாய்)



மோர்கனின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி முதலாவது இரு பது-20 போட்டியில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான 2 போட்டிகள் கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடர் டுபாயில் நடைபெறுகிறது.

முதலாவது போட்டி நேற்று நடை பெற்றது . இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக் களையிழந்து 129 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சொகைப் மலிக் 26 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 33 ஓட்டங்களையும் பாவட் அலாம் 23, அப்துல் ரஷாக் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரேஸ்னன், பிரோட் மற்றும் சுவான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களையும் ரைட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மோர்கனின் அதிரடி அரைச்சத்தின் மூலம் 18.3 ஓவர்களில் 3 விக் கெட்டுக்களை மாத்திரமிழந்து 130 ஓட்டங்களைக் எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித் தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் மோர்கன் 51 பந்துகளில் (7பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 67 ஓட்டங்களையும் பீற்றர்சன் 43 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 43 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் அப்துல் ரஷாக், ஜசீர் கர்பாத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியில் மூலம் இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

# ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் வென்று அவுஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றியது

## மேற்கிந்தியத்தீவுகள் அணி சோகம்



(மெல்பேர்ன்)

ஹோப்ஸின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி ஐந்தாவது ஒரு நாள் போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தி தொடரை 4:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தித்தீவுகள் அணி ஐந்து ஒருநாள் போட்டிகள், 2 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் நான்கு ஒரு நாள் போட்டிகளில் மூன்றில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றதுடன் மூன்றாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக முடிவின்றி கைவிடப்பட்டது.

இந் நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று மெல்போர்னில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, வோட்ஷன், பொண்டிங், ஹோப்ஸ் ஆகியோரின் அதிரடிகை கொடுக்க 50 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 324 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் பொண்டிங் 55 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 61 ஓட்டங்களையும் ஹோப்ஸ் ஆட்டமிழக்காமல் 26 பந்துகளில் (10 பவுண்டரிகள் அடங்கலாக) 57 ஓட்டங்களையும் வோட்சன் 51 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 51 ஓட்டங்களையும் மைக்கெல் கிளார்க் 47, வோக்ஸ் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ராம்போல், பொல்லாட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சமி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கந்தியத்தீவுகள் அணி 36.5 ஓவர்களில் 199 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் சமி ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பொல்லாட் 45, சிம்மோன்ஸ் 29, மில்லர் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பொல்லிங்கர் 3 விக்கெட்டுக்களையும் ஹரிஸ், சிமித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மைக்கேய், கோப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 4:0 என்ற கணக்கில் கைப்பற்றி யது.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு திருப்புமுனை அமைத்த கோப்ஸ் ஆட்டநாயகனாகவும் தொடரில் பிரகாசித்த அணித்தலைவர் பொண்டிங் தொடர் நாயகனாகவும் தெரிவாகினர்.

# எஸ்.எஸ்.சி. வெற்றிக்கிண்ண இருபது-20 கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் நடத்திய எஸ்.எஸ்.ஸி. கிண்ணத்திற்கான இருபது-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடை பெறுகின்றது.

இப் போட்டியில் யாழ்.ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியும் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன.

இதில் ஆசிர் வணிக நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜே.எஸ்.அலக்ஸ் நிக்சனும் சிறப்பு விருந்தினராக கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் வி.மாணிக்கராஜாவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.



யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக உருவாக்கப்பட்ட பெண்கள் கிரிக்கெட் அணி, வடக்கு, கிழக்கு மாகாண மாவட்ட அணிகளுடன் சுற்றுப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக நேற்று திருகோணமலை புறப்பட்டது. இவ்வணிக்கு பயிற்சியாளர்களாக யாழ். மாவட்ட பயிற்றுநர் வீ.கே.சண்முகலிங்கம், யாழ். மாவட்டக் கிரிக்கெட் சங்கச் செயலாளர் ஏ.எஸ்.திஸாந்தன் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

...நகர சபை, யாழ்ப்பாணம்,



# அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி மூலங்கள் ஆராயப்படும்

## போகொல்லாகம தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டமைச்சு சந்தேகத்துக்கிடமான சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி ஒரு விசாரணையை தொடங்க விருப்பதாக அறியப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து முறை தவறிய வழிகளில் நிதி சேர்த்தல், அதனை அரசைக் கவிழ்ப்பதற்கு உபயோகம் செய்தல் ஆகிய குற்றங்களையே அரசு புலனாய்வு செய்ய விருப்பதாக வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லகம தெரிவித்தார்.

இதனை தடுப்பதற்கான எல்லாவகையான ஈடுபாடுகளையும் அரசு மேற்கொள்ளும் என்று அவர் சர்வதேச ராஜதந்திரிகளுக்கு கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# கம்பஹாவில் பசில் போட்டி

(கொழும்பு)

நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கம்பஹா மாவட்டத் தலைமை வேட்பாளராக ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார்.

அதேவேளை கடந்த பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு பிக்குமாருக்கு இம்முறை வாய்ப்பளிக்கப்படவில்லை.

இதற்குப் பதிலாக ஜாதிக ஹெல உறுமயவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டு வந்த அத்துரலிய ரத்ன தேரர் களமிறக்கப்பட்டுள்ளார். (ந-5)

# சுசந்திகா ஜயசிங்கவும் தேர்தலில் போட்டி

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டவீராங்கனை சுசந்திகா ஜயசிங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் கேகாலை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து கிடைத்திருப்பதாக சுசந்திகா ஜயசிங்க கூறினார். (ந-5)

# ஜெனரல் பொன்சேகாவின்...

சிறிலங்காவின் நல்ல முன்னேற்றங்களைக் கொண்டு வரும் என நாம் நம்புகின்றோம்.

மனித உரிமைகளின் நடைமுறைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் முடிபுகளை மேற்கொள்வதுண்டு. எனவே மனித உரிமைகள் பேணப்படாத விடத்து அது தொடர்பான முடிபுகளை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றமே எடுக்கும்.

சிறிலங்காவுடன் வர்த்தக வரிச் சலுகைகள் தொடர்பில் விரிசல்கள் ஏற்பட்டுள்ள போதும் அதனுடன் ஏனைய தொடர்புகளை நாம் பேணி வருகின்றோம்.

வரிச் சலுகையை நிறுத்தும் முடிபுகள் ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டவை. எனினும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சிகளின் பிரதம வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டதும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

சிறிலங்காவின் நடைமுறையிலுள்ள ஊடகச் சுதந்திரம் தொடர்பான விவாதங்களும் வரிச் சலுகையின் நீடிப்புக்கான நிபந்தனைகளாகக் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய விடயங்கள் தொடர்பில் நாம் விரைவில் ஆய்வுகளை மேற்கொள்ளுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# யாழ்.வந்த பயணிகளுக்கு வயிற்றோட்டம்

(சாவகச்சேரி)

வடபகுதிக்கான சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டிருந்த தென்னிலங்கைப் பயணிகள் 75 பேர் வயிற்றோட்டம் காரணமாக, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்தப் பயணிகள் 75 பேரும் தென்னிலங்கையிலிருந்து புறப்பட்டு கிளிநொச்சியில் தங்கிருந்தனர். இவர்கள் அங்குள்ள தண்ணீரை அருந்தியதால் வயிற்றோட்டம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இவர்கள் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். (ந-5)

# வன்னி...

போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையை ஐ.நா. அறிந்திருக்கவில்லை என்று ஜோன் ஹோம்ஸ் கூறினார்.

ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர் என்பது உண்மை என்றாலும் கொல்லப்பட்டோரின் சரியான எண்ணிக்கையை ஐ.நா. அறிந்திருக்கவில்லை என்றார் ஜோன் ஹோம்ஸ்.

போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் இலங்கையின் சுயாதீன விசாரணை வேண்டும் என்று ஐ.நா.வலியுறுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ந-9)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்...

வன்னி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகரத்தினம், சிவநாதன் கிஷோர் ஆகியோர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கதிர்காமநாதன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலிலேயே போட்டியிடவுள்ளார்.

அக் கட்சியின் உப தலைவரான விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி, வெள்ளிமலை , கணேசமூர்த்தி, அலிசாகிர் மௌலானா,ஹிஸ்புல்லா , அமீர் அலி மற்றும் ராஜன் மயில்வாகனம் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகள் இன்று நிறைவடையும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது அம்பாறை, மட்டக்களப்பு , திருகோணமலை மாவட்டங்களில் போட்டியிடவுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் 11 பேர் போட்டியிடவுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராசா தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சவுந்தரராசன், பா.அரியநேத்திரன் மற்றும் சட்டத்தரணி சிவநாயகம், பிரசன்னா இந்திரகுமார், முன்னாள் வங்கி முகாமையாளர் ஆறுமுகம், இளைஞர் சேவைகள் அதிகாரி லோகேஸ்வரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியநாதன் ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

திருகோணமலையில் ஆர்.சம்பந்தன் தலைமையில் துரைரத்தினசிங்கம் உட்பட 6 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் பட்டியல் மற்றும் யாழ்.மாவட்ட வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட் டாரங்கள் தெரிவித்தன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரித்து தனியாகப் போட்டியிட வைப்பதற்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள சிலர் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் தமிழ்க் காங்கிரஸ் கட்சி அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விநாயகமூர்த்தி ஆகியோர் யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாகவும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க பொதுத் தேர்தலில் இன்னும் பல அதிரடிச் செய்திகள் வெளிவர இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# தமிழ்க்...

யிலான குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந் நிலையில் அவர் பேச்சுவார்த்தையிலிருந்து வெளிநடப்புச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்றிரவு அவரைச் சாந்தப்படுத்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவரின் கொள்கையையும் பிரதிபலிக்கும் வகையில் மாற்றங்கள் செய்யாமல், பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றால் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பாடுபடுவோம் என்ற வசனம் மாத்திரம் சேர்க்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இந்த மாற்றத்திலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திருப்தி கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந-5)

IBM Computers for Sale
@
UNI - COMPUTER WAREHOUSE
Original IBM Think Center (Ex - Lease) (With Lock)
Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom
நம்ப முடியாத விலையில் !!!
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் எமது நிறுவனம் திறந்திருக்கும்)
Internet Browsing Center களுக்கும் அரசு, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!
System மட்டும் Rs.22000/= இன்றே முந்துங்கள் !!!
IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!
அனேக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விரும்பி பாவிக்கப்படுவது!!!
நீடித்த பாவனைக்காலம் மிகக்குறைந்த மின்சாரத்தில் இயங்க கூடியது !!!
விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862



# தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் கிளிநொச்சி

மேற்படி கழகத்தில் உறுப்புரிமை பெற்றிருந்த முன்னைய உரிமையாளர்கள் புதிய உறுப்புரிமையினை எதிர்வரும் 09.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் செயலகத்துக்கு முன்பாக இயங்கும் எமது பணிமனையில் வந்து பதிவு செய்து உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

புதிதாக எமது கழகத்தில் இணைய விரும்புவோர், கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவர்களாக இருப்பதுடன் அதனை கிராமசேவையாளர் ஊடாக, உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றுடன் அல்லது கடிதத்துடன் எமது கழகத்தில் சமர்ப்பித்து புதிய உரிமையாளர்களாக உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

*தகவல்:*
*க.ஜெகதீஸ்வரன் – தலைவர்*
*தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,*
*கிளிநொச்சி.*

(க-4476)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி பொன்னுத்துரை

**(ஓய்வு பெற்ற இரசாயனவியல் ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி, நைஜீரியா பல்கலைக்கழகம்)**



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் பதிவாளர் வீதி, திருநெல்வேலி கிழக்கை (தலங்காவில் பிள்ளையார் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை (19.02.2010) வெள்ளிக்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கமாணிக்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் துரைச் செல்வி, ஐங்கரநேசன், ஆறுமுகநேசன், பத்மினி அனுஷியா, ஸ்ரீ தத்தாத்திரேயநேசன், ரவிச்சந்திரநேசன், திருக்கேதீசரநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சிவபாலன், ஆனந்தமூர்த்தி, பாமினி, நந்தினி, எழிலரசி (பிரதேச வைத்தியசாலை வேலணை), கெங்காதேவி, கோமதியா (இந்திரா) ஆகியோரின் மாமனாரும்,

அஞ்சலி, பைரவி, துஷ்யந்தி, துவாரகன், துஷ்யந்தன், நிலானி (வள்ளி), கம்பன், யுவேதா, திவ்யநேசன், நிதர்சன் பத்திரன், நிவேதா மாணிக்கம், சவரினா, எலிசபெத், பெஞ்சமின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.02.2010 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 10.30 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பதிவுகாரர் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*(தலங்காவில் பிள்ளையார் கோவிலடி),*
*யாழ்ப்பாணம்.*

*தகவல் :*
*பொ. ஐங்கரநேசன்*
*பொ.ஸ்ரீதத்தாத்திரேயநேசன்*

(468)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.